# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 14 வெள்ளிக்கிழமை (01-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 265

# பொதுநலவாய நாடுகளில் ஒன்று 3 ஆம் தரப்பாக செயற்பட வேண்டும்

## தமிழ்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 1

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்கபிரிட்டன் அல்லது பொதுநலவாய நாடுகளில் ஒன்று 3 ஆம் தரப்பாகச் செயற்பட முன்வரவேண்டும்.

கொழும்பு வந்துள்ள பொதுநலவாய நாடுகளின் தெற்கு ஆசியப் பிரிவுக்கான அதிகாரியான மைக்கல் ஹோம்ஸிடம் மேற்கண்டவாறு தமிழ்க் கட்சிகள் கோரியுள்ளன.

நேற்று முன்தினம் அவரைக் கொழும்பில் சந்தித்த சமயமே தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டாக அவரைச் சந்தித்தனர்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை, பொது மக்களின் அவல நிலை, அரசியல் தீர்வு விவகாரம் ஆகியன தொடர்பாக தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளிடமிருந்து அவர் கேட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் பாதை திறக்கப்பட்ட பகுதியில் படையினர் குண்டு வீச்சு!

### விடுதலைப் புலிகள் குற்றச் சாட்டு

வவுனியா, ஒக். 1

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் பாதை ஒன்றைத் திறக்கும் வகையில் கண்டி — யாழ்ப்பாணம் பாதையில் மாங்குளம் பகுதியில் யுத்த சூனியப் பிரதேசமாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பிரகடனம் செய்துள்ள பகுதியை அண்டிய பகுதிகளில் ஸ்ரீலங்கா படையினர் ஷெல் மற்றும் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் யுத்த சூனியப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்ட மாங்குளத்திலுள்ள தமது முன்னணி நிலைகளை அண்டிய பகுதிகளிலேயே இந்தத் தாக்குதல்கள் செவ்வாய், புதன்கிழமைகளில் நடத்தப்பட்டுள்ளன என்றும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் விமானப்படையின் கிபிர் விமானங்கள் இந்த யுத்த சூனியப் பிரதேசத்துக்குச் சமீபமாகக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின என்றும் —

காலை 7-10 மணியளவில் படையினர் மாங்குளத்தை அண்டிய பகுதிகளில் இருந்து யுத்த சூனியப் பிரதேசத்துக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு-கிழக்கில் பணிபுரியும்

## தென்னிலங்கை டாக்டர்களை திருப்பி அழைக்கப்போவதாக சங்கம் மிரட்டல்

கொழும்பு, ஒக். 1

வடக்கு — கிழக்கில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் தென்னிலங்கையைச் சேர்ந்த வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கு இருவார காலத்துக்குள் தீர்வு காணப் படாவிட்டால் அவர்களை கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்போவதாக அரச வைத்தியர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரச வைத்தியர் சங்கம் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு — கிழக்கில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் கடமை ஆற்றும் இந்த வைத்தியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு, இலவச விமானப் பயணம், விடுதி வசதி ஆகியவற்றை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது என்றும்—

ஆனால் இவற்றில் ஒன்றை யாவது அரசு இதுவரை நிறைவேற்றவில்லை என்றும் —

இவற்றை அடுத்த இருவார

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபரை விடுவிக்குமாறு கோரி மன்னாரில் ஊர்வலம்

### ஞாயிறன்று நடத்த ஏற்பாடு

மன்னார், ஒக். 1

கடந்த மாதம் 4 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மன்னார் அரச அதிபர் எஸ்.எம். குறூஸை விடுதலை செய்யக் கோரி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்வலம் ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

மன்னார் பிரஜைகள் குழு, வாழ்வோதயம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த ஊர்வலம் புனித செபஸ்தியர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி நகரில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### ஒருவர் கைது

யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளியாகப் பணிபுரியும் பொன்னன் உதயகுமார் (வயது 33) என்பவர் நேற்றுக் காலை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மனித உரிமை ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பி.பி.ஸி. செய்தியாளருக்கு கொலைப் பயமுறுத்தல்!

### அரசு பாதுகாப்பு வழங்குமாம்

கொழும்பு, ஒக். 1

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் செல்வி சூஸனா பிறைஸுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு அவர் வீட்டில் இல்லாத சமயம் தொலைபேசி மூலம் இந்தப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டது என்றும்—

அவரது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த தொலைபேசிப் பரிவர்த்தனை உபகரணத்தில் இந்தப்பயமுறுத்தல் தொடர்பான விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

"ஒருவார காலத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும். அன்றேல் கொலை செய்யப்படுவீர்" என்று அந்தப் பதிவில் கூறப்பட்டுள்ளதாம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புத் தாக்குதலில் பலியானோருக்கு நஷ்டஈடு

### அரசு ஆராய்கிறதாம்

கொழும்பு, ஒக். 1

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மந்துவில் கிராமத்தில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக ஆராயப்படுகின்றது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் படையினரால் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இதன் காரணமாக அங்கு சென்று நேரடியாக விசாரணைகளை மேற்கொள்ளமுடியாதுள்ளது.

தகவல்களைப் பெற்று அதன் அடிப்படையில் நாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். இது விடயமாக தெளிவான தகவல்களை விரைவில் எம்மால் வெளியிட முடியும் என்றார் —

## கதிர்காமர் கூற்றுக்கு புலிகளும் கண்டனம்

லண்டன், ஒக். 1

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் ஐ.நா. சபையோ அல்லது வேறு எந்தத் தரப்பினரோ தலையிடத் தேவை இல்லை என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்ட கருத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஐ.நா. சபையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்ற சமயம் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்

விடுதலைப் புலிகள் இயக்கம் இவரது கூற்றைக் கண்டித்து விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா 'கோட்டா'வில் யாழ். மாணவருக்கு அனுமதி?

### அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக். 1

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் வவுனியா கோட்டாவில் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவு செய்யப்படக் காரணமாக இருந்ததாகக் கூறப்படும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபருக்கு எதிராக வவுனியா பாடசாலை சிரேஷ்ட வகுப்பு மாணவர்கள், பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வவுனியா கல்வி அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கருத்தரங்கு

கொக்குவில் லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்படும் கிராமிய மகளிருக்கான தொழிற் பயிற்சிப் பட்டறைக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக வணிகத் துறைத் தலைவர் கே. தேவராசா, யாழ். கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி, இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி முகாமையாளர் வீ. ஐயம்பெருமாள், வணிகத்துறை விரிவுரையாளர் தி. வேல்நம்பி ஆகியோர் கருத்துரை நிகழ்த்துவர். (ஐ-4)

## திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 1

பனை அபிவிருத்திச்சபையின் முன்னாள் செயலாளரான அமரர் சசி கிருஷ்ணமூர்த்தியின் திருவுருவப் படம் சபையின் யாழ். அலுவலகத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அவரின் முதலாவது ஆண்டு நினைவு தினம் சபையின் ஊழியர்களினால் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-5)


**விக்னா**
**கல்வி நிறுவனம்**
பொருளியல்
திரு. விக்கி
A/L 2001
நெகிழ்ச்சி
ஆரம்பம்:- 02-10-99
[10-00 a m]
(69529)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**பாண்டியன்**
10-30, 2-30,
(சி/9112)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
விஜய் - ரம்பா நடித்த
**மின்சாரக்கண்ணா**
காட்சிகள் 10-30, 2-30
T.P.No. 070-212223
(69290)

**நாகம்ஸ்**
**சுன்னாகம்**
சரத்குமார் - வினித்தா
சுகன்யா - கவுண்டமணி
நடித்த
**மகாபிரபு**
காட்சிகள்: 11-00, 2-30
(புதிய நேரம்)
(69521)


## இன்றைய நிகழ்வுகள்

வேலணை, ஒக் 1

நயினாதீவில் புனரமைக்கப்பட்ட மூன்று சந்தைகளின் கட்டடங்கள் இன்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வேலணைப்பிரதேசசெயலர்செ. இரத்தினம் வேலணைப்பிரதேச சபைத் தலைவர் க. கருணாகரமூர்த்தி ஆகியோர் கட்டடங்களைத் திறந்து வைப்பார்கள் (இ-3-167)

★ ★ ★

குருநகர், ஒக். 1

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நடத்தப்பட உள்ள சிறுவர்தின நிகழ்ச்சிகள் இன்று காலை 9-00 மணிக்கு யாழ் வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற உள்ளன.

அரியாலை. திருநெல்வேலி, நாவாந்துறை, பளை ஆகிய இடங்களிலுள்ள ஐந்து பாடசாலைகளில் பராமரிக்கப்பட்டு வரும் சிறுவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர். சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை யோசப் பாலா தயாரித்தளிக்கின்றார். (இ-51)

★ ★ ★

குருநகர், ஒக். 1

முதியோர் தினத்தையொட்டி யாழ். கிறிஸதவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணி முதல் பல நிகழ்ச்சிகள் சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன.

சங்கத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் 31 முதியவர்களுக்கான வைத்தியபரிசோதனை. கலை நிகழ்ச்சிகள் ஆகியன இங்கு இடம்பெறும் (இ-3-51)

★ ★ ★

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் பாடசாலையின் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எஸ். வேன்முருகோன்பிள்ளை பிரதம விருந்தினராகவும், நல்லூர் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் சிறப்பு விருந்தினராகவும். கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் அதிபர் இ. அருணாசலம் மற்றும் மேற்படி வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி க. ஆறுமுகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை சிவஸ்ரீ ச. சிறீஸ்கந்தராசாக் குருக்கள் வழங்குவார். (இ-7)

★ ★ ★

மல்லாகம் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளி காலை 9 மணிக்கு அதிபர் வி. சச்சிதானந்தன் தலைமையில் மல்லாகம் இ. போ. ச. பேருந்து மண்டபத்தில் நடைரெறவுள்ளது.

ிந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் வீ. இராசையாவும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆ, வ கணேசலிங்கமும் கலந்து கொள்வர்.

ஆசியுரையை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், நிறுவுநர் நினைவுப் பேருரையை மு. சண்முகராஜாவும் நிகழ்த்துவர். (ஐ-27)

★ ★ ★

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நினைவு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் பரிசளிப்பு விழாவும் பிற்பகல் 1.30 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

பரிசளிப்பு விழாவில் முதன்மைவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனனும் கலந்து கொள்வர்

கலை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி குணராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் கணக்காளர் தி. சுதந்திரபாலனும் கலந்து கொள்வர். (ஐ-51)

## சமய சந்நிதியில்

யாழ். போதனா வைத்தியசாலைபுனித வேளாங்கண்ணி அன்னை தேவாலய திருநாள் திருப்பலி நாளை மறுதினம் காலை 7.15 மணிக்கு நடைபெறும். யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (இ-6)

## ஆசிரியர் பற்றாக்குறை

வலி. கிழக்கு, ஒக். 1

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக் குறையினால் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலையில் ஒன்பது ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க வேண்டிய இடத்தில் தற்சமயம் நான்கு ஆசிரியர்களே கல்வி கற்பிக்கின்றனர். இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அதிபர் சம்பந்தப்பட்டோரிடம் கோரியுள்ளார். (ஐ-180)

## திருட்டு

சுன்னாகம், ஒக். 1

சுன்னாகம், உடுவில் பகுதிகளில் கடந்த சில தினங்களில் மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

சுன்னாகம் தெற்குப் பகுதியில் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த புதிய சைக்கிளொன்றும், உடுவில் பகுதியில் வீடொன்றில் நிறுத்தப்பட்டிருந்த இரு சைக்கிள்களும் பகல் வேளையில் திருடப்பட்டுள்ளன. (ஐ-27)


**ஞானோதயா**
**அக்கடமி**
சாவகச்சேரி.
**அளவையியல்**
S. S. மனோகரன்
2000, 2001
ஆரம்பம்: 03 - 10 - 99
ஞாயிறு நேரம்: பி.ப. 2-30
(69530)


## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினரால் 30—09—1999 வியாழக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப் பட்ட இலக்கங்கள் வருமாறு:-

முதலாம் பரிசு: 681
இரண்டாம் பரிசு: 2608
மூன்றாம் பரிசு: 252

ஆறுதல் பரிசிலுக்குரிய இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 133 | 2451 | 1847 | 620 | 1811 |
| 1161 | 1156 | 1143 | 2401 | 1534 |

உரியவர்கள் 1 — 11 — 1999 இற்கு முன் இந்து மன்றத்திடம் தொடர்பு கொள்ளவும்.

**இந்து மன்றம்**
**யாழ். பலகலைக் கழகம்.**
(69523)

## சீட்டிழுப்பு முடிவுகள்

மானிப்பாய் டச்சு வீதி,
**அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான**
கட்டடத் திருப்பணிக்காக 1999-09-28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிறபகல் 3.00 மணிக்கு நடைபெற்ற
**அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

1 ஆம் பரிசு சீட்டு இலக்கம் - 1024
2 ஆம் பரிசு சீட்டு இலக்கம் - 639
3 ஆம் பரிசு சீட்டு இலக்கம் - 744

ஆறுதல் பரிசுகளுக்கான சீட்டு இலக்கங்கள்

19 773 65 1289 1606

தயவு செய்து மேற்படி அதிர்ஷ்டசாலிகள் தங்கள் சீட்டுக்களுடன் எதிர்வரும் 15—10—99 இற்கு முன்னர் ஆலய நிர்வாகியிடம் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

''உங்கள் ஆதரவுக்கு நன்றி''

கு. சசிகுமார்
(தொண்டரும் ஆலய நிர்வாகியும்)
(69513)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்
**திரு சு. சிவலோகநாதன்**
அவர்களின் மாமியாராகிய
**திருமதி**
**மல்லிகேஸ்வரி முருகேசம்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
உடுவில் மகளிர் கல்லூரி.
(69525)


**புலமைப்பரிசில்- 2000**
7 ஆவது பரீட்சையில்
அதிகூடிய புள்ளி பெற்றோர்
த. திவாகர்
யா/பரியோவான் கல்.
ச. ஷாமளை
யா/ இ. ம. கல்.
பா. தர்மினி
யா/வடமராட்சி இ. ம. க.
ஜெ. கிருத்திகா
யா/ இ. ஆ. பா.
அ. டிறோஷன்
யா/ மத்திய கல்.
அடுத்த பரீட்சை:
[illegible]
BOND யாழ் நகர்.
(69520)


## வாழ்த்துகின்றோம்

எமது அயல் கல்லூரியான யாழ்ரன் கல்லூரியின் அதிபர்
**திரு. என். பரமசிவம்**
அவர்கள் பதவி உயர்வு பெற்று ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரியாக நியமனம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்.**
கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வித்தியாலயம்,
காரைநகர்.
(69531)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராசையா
(செட்டியார்)

3 ஆம் கட்டை ஆனைக்கோட்டையை சேர்ந்த வேலுப்பிள்ளை இராசையா (செட்டியார்) அவர்கள் நேற்று 30 - 09 - 99 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01-10-99 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கை தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. ரவிச்சந்திரன்
(மருமகன்)
3 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.
(சி/9141)

### திருமதி
### மல்லிகேஸ்வரி முருகேசம்பிள்ளை
(அளவெட்டி வடக்கு)

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி மல்லிகேஸ்வரி முருகேசம்பிள்ளை அவர்கள் நேற்று 30-9-99 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr. காசிநாதர் முருகேசம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் இந்திராதேவி, நந்தினி, சுவீந்திரன் (சுவிஸ்), ரவீந்திரன் (வீடமைப்பு அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரகாந்தன் (மக்கள் வங்கி, K. K. S), சிவலோகநாதன் (உடுவில் மகளிர் கல்லூரி), ரஞ்சினி (கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிராமி, கபிலன், நிதிபன், குணேசன், சாருகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [30-9-99] வியாழக்கிழமை பிற்பகல் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. ரவீந்திரன்
''சறோன்''
மானிப்பாய் வீதி, உடுவில்.
(69514)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்தபின்னர் அழுது புலம்புவதை விடுத்து உயிருடன் முதியோரை அன்பினால் தழுவுங்கள்

சமூகஜோதி
**க. கணேசதாஸன்**

**இன்று சர்வதேச முதியோர் தினமாகும். அதனை ஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகுகின்றது.**

ஒக்ரோபர் முதலாம் திகதியாகிய இன்று சர்வதேச முதியோர் தினம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். வயது முதிர்ந்தோர் தினம் ஒன்றைப் பிரகடனப்படுத்திய தன் முக்கிய குறிக்கோள் என்னவெனில் வயது முதிர்ந்தோர் பற்றிய ஒரு கவனத்தினை பொது மக்கள் பால் ஈர்ப்பதாகும். இங்கு வயது முதிர்ந்தோர் என நாம் கருதுவது தளர்ந்த செயற்பாடுகளற்ற ஒரு மக்கள் சமூகமாகும். எனினும் வயது முதிர்ந்தோர்களில் இருந்து நல்ல திறமைகள் வெளிக்கொணரப் படலாம். அநுபவம், முதிர்ச்சி, அறிவாற்றல் போன்ற பல செய்திறன்கள் இவர்களில் காணப்படுகின்றன. அவற்றினை இனம் கண்டு நாட்டிற்குப் பயன்படுமாறு ஆக்கிக்கொள்ளல் அவசியம். அப்போது அவர்களின் அவசியம் பற்றி சமூக ரீதியிலான ஒரு வரவேற்பு ஏற்படும்.

''காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்'' என்ற பழமொழிக்கமைய இன்றைய இளம் சமுதாயம் முன்பு போலன்றி முதியோர்களை ஏளனம் செய்வது மட்டுமல்லாமல் அவர்களை ஆதரித்து கவனிப்பதிலும் சற்றுப் பின்னிற்பதைக் காண்கின்றோம்.

வாழ்க்கையின் பல்வேறு அத்தியாயங்களுள் மூப்பும் ஒரு முக்கியமான அத்தியாயமாக இருப்பது நிதர்சனம். இன்றைய இளைஞர்கள் வருங்கால முதியோர்கள் என்பதை உணரவேண்டும். முதியோர் தமது நேரம். பொருள், சக்தி போன்றவற்றைப் பெருமளவில் தியாகம் செய்து இளம் சந்ததியினரை வளர்த்தெடுத்தவர்கள் என்பது உண்மை. பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களினூடே உருவாக்கப்பட்ட இவர்களது வழித்தோன்றல்கள் இன்று இவர்களை மறந்து தமது சொந்த நலனில் மட்டும் அக்கறை கொண்டு வாழ்வதுதான் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது.

எத்தனையோ இன்னல்களின் மத்தியில் தாயோ தந்தையோ தமது பிள்ளைகளைப் பல்வேறு நம்பிக்கைகளுடனும், எதிர்பார்ப்புக்களுடனும் வளர்த்தெடுக்கின்றனர். மகனோ, மகளோ, தம்மைத் தமது பிற்காலத்தில் பராமரிப்பர், தமது பேரப்பிள்ளைகளின் மழலை மொழிகளைக் கேட்பதிலேயே தமது எஞ்சிய காலத்தைச் சந்தோசமாக ஓட்டிவிடலாம் என்ற கனவுகளில் மிதக்கும் அவர்களுக்கு இறுதியில் மிஞ்சுவதெல்லாம் தனிமையான ஏக்கம்நிறைந்த நினைவுகள் மட்டுமே.

குடும்பத்தின் பொருளாதாரத்தைச் சீர்செய்யும் நோக்குடன் குடும்பத் தலைவன், தலைவி இருவருமே இன்றைய காலகட்டத்தில் வேலைத்தளங்களை நோக்கி விரையவேண்டியுள்ளது. இதனைக் காரணம் காட்டி, எத்தனையோவிதமான வேலைப் பளுக்களின் மத்தியில் முதியோரை வீட்டில் வைத்துப் பராமரிப்பது மிகக் கடினம் என்ற காரணத்தை முன் வைத்துத் தமது தலையான பொறுப்புக்களை, கடமைகளைப் பிள்ளைகள் தட்டிக் கழிக்கப் பார்க்கின்றனர். அத்தோடு மட்டும் இல்லாது இன்னும் சிலர் பொருளாதார ரீதியாக அவர்களைப் பராமரிப்பதில் உள்ள பிரச்சினைகள் வீட்டின் இடவசதிப் பற்றாக்குறை என்ற சாட்டுக்களை முன்வைத்து பெற்றோரைத் தனிமையாக்கி விடுகின்றனர். அதுவும் பெரும்பாலும் மேல் வர்க்கத்தினரினாலும் நடுத்தர வர்க்கத்தினராலும் தான் இப்புதிய கலாசாரம் பேணப்பட்டு வருகிறது.

பிள்ளைகளால் கைவிடப்பட்டு முதியோர் இல்லங்களில் வாழும் பெற்றோர் இன்னும் தமது பிள்ளைகள் மேல்பழி சுமத்த விரும்பாது ''எனது பிள்ளைக்கு என்னைத் தன்னுடன் வைத்திருக்கத்தான் விருப்பம் ஆனால் இடவசதிப் பற்றாக்குறையினால்தான் என்னை இங்கு இருக்க அனுமதித்து இருக்கிறான்'' என்று கூறித் தங்கள் பிள்ளைகளின் நியாயமற்ற செயல்களை மறைத்து அதை நியாயப்படுத்த முயல்வதுதான் புரியாத புதிராக உள்ளது. இதைத்தான் 'பெற்ற மனம்பித்து பிள்ளை மனம் கல்லு' என்று கூறி வைத்தார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

நாளை உருவாகப்போகும் புதிய சமுதாயமும் இதையே தமக்குச் செய்யப்போகின்றது என்பதை இன்றைய இளவயதுப் பெற்றோர் உணர மறுக்கின்றனர். உலகில் எல்லாத் துன்பங்களிலும் கொடியது தனிமை என்று கூறுவார்கள். தனது உதிரத்தையே பாலாக்கித் தனக்கீந்த தாய்க்கும் அறிவூட்டிய தந்தைக்கும் இன்றைய பிள்ளைகள் அளிக்கும் வெகுமதி தனிமை. இத்தனிமையால் மனம்புழுங்கும் வயோதிபர் தாம் உலகிற்கு இனித் தேவையற்றவர்கள் என்ற அந்தத் தொடர்ச்சியான மன அழுத்தத்தினால் சித்த சுவாதீனமற்றநிலைக்கு தள்ளப்படுகின்றனர். சிலர் தம்மையேமாய்த்துக்கொள்ளவும் முன்வருகின்றனர்.

இவ்விதமான முதியோரின் துன்பங்களுக்குத் தீர்வு காணும் முக்கிய பொறுப்பு இன்றைய இளம் சமுதாயத்தினரின் கையில்தான் உள்ளது. முதலில் முதியோரைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவத்தை ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களால் ஏற்படும் சிறு தொந்தரவுகளுக்காக முகஞ்சுளிக்காமல் அதனைப் பொறுமையோடு அநுசரித்து சில விட்டுக் கொடுப்புகளை மேற்கொண்டு பிள்ளைகள் தான் உலகம் என்று இறுதி வரை வாழ்ந்த அவர்களின் நம்பிக்கைவீண்போகாதவாறு பார்த்துக்கொள்ளுதல் இன்றியமையாததாக இருக்கிறது. மேலும் முதுமையின் பளு அவர்களைத் தாக்காத வண்ணம் அவர்களைத் தாங்கிப் பிடிக்க வேண்டும். இறுதி வரை அவர்களுக்கு உற்ற துணையாக இருக்க வேண்டும். மரணம் அவர்களைத் தழுவிக் கொண்ட பின் அழுது புலம்புவதில் பயனில்லை. அவர்கள் உயிருடன் இருக்கும் போதே அவர்களை அன்பினால் தழுவிக் கொள்ள வேண்டும்.

இலங்கை மக்களின் எதிர்பார்க்கப்படுகின்ற ஆயுட்காலம் 70 வயதைத் தாண்டியுள்ளது எனத் தெரியவந்துள்ளதுடன் இலங்கையின் சனத்தொகையில் 8 சதவீதமானோர் 65வயதுக்குமேற்பட்ட வயதைச்சார்ந்தவர்கள் என்ற கருத்தும் வெளியிடப்பட்டுள்ளது. புள்ளி விவரங்களின் படி வருடாந்தம் பெருமளவு எண்ணிக்கையில்வயது முதிர்ந்தோர் அதிகரித்துக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு தேவையான வசதிகளை உருவாக்குவதில் அரசாங்கமும் சமூக சேவை அமைப்புக்களும் மட்டுமன்றி நாமும் கவனமெடுத்தல் வேண்டும். அத்துடன் பல எதிர்ப்புகளோடு, ஏமாற்றங்களோடு வாழும் இந்த வயது முதிர்ந்தோரின் அநாதரவையும் தனிமையையும் போக்கி மகிழ்ச்சியோடு தமது இறுதி நாள் வரை வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துதல் எமது கடமையாகும். ★

# அப்புவுக்கு ஆச்சி துணை; ஆச்சிக்கு அப்புவே துணை!

மனிதன் பிறக்கிறான்; வாழ்கின்றான் இறுதியில் நரை, திரை, மூப்படைந்து வயோதிபப் பருவத்தை அடைகின்றான். பிள்ளைகளைப் பெற்று வளர்த்து கல்வி கற்பித்து, தொழில் தேடிக்கொடுத்து, இறுதியில் திருமணம் செய்து வைத்து தனது கடமைகளை முடித்துக் கொள்வான். தான் பெற்று வளர்த்து விட்ட மக்கள் இறுதிக் காலத்தில் தமக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று எண்ணிக் கனவு காண்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் எண்ணியபடியே நடந்தது. பெற்றோருக்காக திருமணம் செய்யாது பெற்றோரைக் கடைசி வரை காப்பாற்றி வாழ்ந்து காட்டிய பிள்ளைகளும் உண்டு. ஆனால் இன்று ஒரு தகப்பனும் தாயும் பத்துப் பிள்ளைகளைப் காப்பாற்றுகிறார்கள். இன்று பத்துப் பிள்ளைகளும் சேர்ந்து ஒரு வயோதிபத் தகப்பனை, தாயைக் காப்பாற்ற முடியாது தவிக்கிறார்கள் காரணம் இன்று எமது நாட்டின் நிலைமை தான். நாட்டின் நிலைமையைக் காரணம் காட்டி சில பிள்ளைகள் வயது போன பெற்றோரை தவிக்கவிட்டு வெளிநாடு

## ஓர் அநுபவப் பகிர்வு

சென்று விட்டார்கள். இன்றும் சென்று கொண்டிருக்கிறார்கள். பெற்றோருடன் ஒன்றாக வாழும் ஒரு சில பிள்ளைகள் வீட்டில் இருக்கும் பெற்றோரை மதிப்பதில்லை; அவர்களின் விருப்பு வெறுப்புக்களை கவனத்திற் கொள்வதில்லை; நேரகாலத்திற்கு உணவு கொடுப்பதில்லை; அவர் விரும்பியதைக் கொடுப்பதில்லை; பிள்ளைகளைக் கேட்டால் பேசுவார்களோஎன்ற பயத்தினால்சில வயோதிபர் பட்டினி கிடப்பதும் உண்டு. தமது வயோதிபப் பெற்றோர் வீட்டில் இருந்தால் வீட்டை அழுக்காக்கி விடுவார்கள் என்று எண்ணியோ, எண்ணாமலோ — அவர்களின் விருப்பத்திற்கு மாறாக — அரசாங்க வயோதிப விடுதியில் சேர்த்து விடுவார்கள். அங்கே அவர்கள் தாங்கள் தமது வீட்டில் வசதியாக வாழ்ந்த காலத்தை நினைத்துக் கவலைப் பட்டுக் கொண்டிருப்பார்கள். நடக்க முடியாத வயோதிபப் பெற்றோருக்கு நோய் ஏற்பட்ட காலத்தில் அரசாங்க வைத்தியசாலை விடுதியில் சேர்த்து விட்டு ''அப்பா நாங்கள் போட்டுவாறம்; சிவராசா உங்களைக் கவனிப்பார். தேவையானதை அவரிடம் கேட்டால் தருவார்'' என்று கூறி முன்பின் தெரி

## முதியோர்களின் இன்றைய நிலை என்ன?

யாதஒருவரிடம்பெற்றதகப்பனைஒப்படைத்து விட்டு வீடுசென்று அங்கே மனைவி மக்களோடு கவலையின்றி வாழ்ந்து கொண்டிருப்பார்கள் இதை நாம் இன்று காணமுடிகிறது. எனவே இன்றைய முதியோர்கள் தங்கள் வீட்டிலோ வயோதிப சாலையிலோ அல்லது வைத்திய சாலையிலோ படும் துன்பங்களை நேரில் பார்க்கும் போது நாளைக்கு அவர்களின் நிலை நமக்கும் வருமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இன்று வீடுகளில் அப்புவும் ஆச்சியும் தான் வசிக்கிறார்கள். அப்புவுக்கு ஆச்சிதான் துணை; ஆச்சிக்கு அப்புதான் துணை. இருவருக்கும் கடவுள்தான் துணை, வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகள் வந்து எம்மைக்காப்பாற்றுவார்கள் என்ற அற்ப ஆசையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகளைப் பற்றிக் கேட்டால் ஐயோ! அவர்கள் பாவம் அவர்கள் உயிரைக் காப்பாற்றத்தான் போனவர்கள்; உழைக்கப்போகவில்லை என்று நிறைவாகக் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். பிள்ளைகள் பெற்றோரை மறந்தாலும் பெற்றோர் இறுதிவரை பிள்ளைகளை மறப்பதில்லை. எனவே எமது பெற்றோர் முதியோர் ஆன காலத்தில் உணவு, உடை, நோயுற்ற காலத்தில் தரமான வைத்திய வசதிகள் வழங்கி அவர்கள் மனம் கலங்காது துன்பப்படாது வாழ எம்மால் ஆன உதவிகளைச் செய்[illegible] மறக்கலாகாது.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

— ''அரனம்''

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 31 — 01 — 1946 | 01 — 09 — 1999 |

அமரர்

## யாக்கோப்பு செபஸ்தியாம்பிள்ளை

(பொன்னுத்துரை ஜெஸ்லின் அரிசி ஆலை உரிமையாளர்.)

எனது கணவரின் பிரிவுச் செய்தி கேட்டு கலங்கி நின்ற எமக்கு உதவிகள் பல புரிந்தோர்க்கும், தபால் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும் அமரரின் இறுதிச் சடங்கில் கலந்து உதவிகள் பல புரிந்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் மற்றும் திருவுளச் சபை உறுப்பினர்களுக்கும் அருட்தந்தையர்களுக்கும், திருப்பலி ஒப்புக்கொடுத்த முகமாலை பங்குத்தந்தை அவர்களுக்கும் மறை ஆசிரியர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் பிரசுரித்தோர்க்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அமரரின் 31 ஆம் நாள் இளைப்பாற்றுத் திருப்பலி இன்று (01-10-99) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு புலோப்பளை புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

புலோப்பளை கிழக்கு,
பளை.

(69501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரப் பகுதி ஊழியர்களின்

# மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு நிதி வரவில்லை

திருநெல்வேலி, ஒக். 1

யாழ். சுகாதார திணைக் களத்திலும் மற்றும் யாழ். பிராந்தியத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு கடந்த ஏப்ரல் மாதம் முதல் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு மற்றும் பிரயாணக் கொடுப்பனவு ஆகியவற்றை வழங்குவதற்கான நிதியை வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இது வரை இங்கு அனுப்பி வைக்க வில்லை.

இந்தநிதியைப்பெறுவதற்கு பல முறை விண்ணப்பித்தும் இன்னமும் கிடைக்க வில்லை என்று— யாழ். சுகாதார சேவைபிரதிமாகாணப்பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் தமது பிரிவிலுள்ள நிறுவனத் தலைவர்களுக்கு இவ் வாரம் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் அனுப்பப்படும் கட்டு நிதியானது ஊழியர்களின் சம்பளம் மற்றும் நானாவித கொடுப்பனவுகள் வழங்குவதற்கே பயன் படுத்தப்பட்டு வருகின்றது என்றும்—

மேலதிக வேலை நேர கொடுப்பனவுக்கானநிதியைப் பெறுவதற்கு தொடர்ந்தும் மாகாணசுகாதாரஅமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு வருவதால் இது பற்றிய விவரதைத் ஊழியர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும் என்றும்—

அந்தச் சுற்றறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-135)

# வயல்களில் விதைப்பு ஆரம்பம்

புன்னாலைக் கட்டுவன், ஒக். 01

செவ்வாய் இரவு குடாநாட்டில் பெய்த மழையைத் தொடர்ந்து விவசாயிகள் வயல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே வயலை உழுது பண்படுத்தி வைத்திருந்த விவசாயிகள் தமது விதைப்பு முயற்சிகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர்.

மேலும் தோட்ட செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மிளகாய், புகையிலை, கத்தரி, கோவா நாற்று மேடைகளை அமைத்துள்ளனர்.

(இ-133)


எமுது வினைஞர்

**போட்டிப் பரீட்சை**

★ ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள இப்போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்.

புதிய பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பம்:- 04 – 10 – 99 [காலை 9 மணி]

★ அச்சடித்த பாடக் குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.

★ 30 மணித்தியால வகுப்புக்கள் நடைபெறும்.

ஆசிரியர்:– அ. குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சனி, ஞாயிறு வகுப்புகள் 2 மணிக்கு நடைபெறுகின்றன)

(69461)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**

அந்தியேட்டி - வீட்டுக்கிருத்திய

**அழைப்பும்**

தோற்றம் 10 – 04 – 1914



மறைவு 03 – 09 – 1999

அமரர் **சின்னத்தம்பி கனகரெட்ணம்**

பாசமிகு தந்தையே!
என்றென்றும் உங்கள் நினைவலைகள்
எங்கள் இதயங்களில்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 01—10—1999 வெள்ளிக்கிழமை வில்லூன்றி தீர்த்த மடத்திலும் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியம் 03—10—1999ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதோடு மதிய போசனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 3,
சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[69439]


மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி

# அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆராயப்படும்

## வடக்கு - கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக். 1

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும்ஆரம்பிப்பது குறித்து ஆராயப்படும் என்று வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

வவுணதீவு, பட்டிப்பளை மற்றும் போரதீவு, வாகரை போன்ற பகுதிகளில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சகல வகையான அபிவிருத்தித் திட்டங்களையும் உடனடியாக நிறுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அண்மையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதனை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராசா வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரிடம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின்

# தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கப்படுவதில்லை

## அமைச்சுச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

வடக்கு–கிழக்கு மாகாணத்தின் தேவைக்கேற்ப மாகாண சபைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என்று தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மாகாண விவசாய, கால்நடை, காணி நீர்ப்பாசன, கூட்டுறவு கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எஸ். ரி. மார்க்கண்டு கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

மாகாணசபைக்கு பிரமாண அடிப்படையில் ஒதுக்கப்படும் நிதிஒவ்வொரு மாவட்டத்துக்கும் வழங்கப்படுகிறது.

ஒதுக்கப்படும் நிதி மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்கு போதாத்தாக உள்ளதால் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் ஐ. நா. நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில்தங்கியுள்ள மாகாண அமைச்சின் அதிகாரிகள் தமது அமைச்சுக்குக் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாட்டு முன்னேற்றம் மற்றும் மதிப்பீட்டு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-5)

# புலிகளுக்கு ஆயுதம், வாகனம் வழங்கி வந்தாராம்!

## வவுனியாவில் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 1

புலிகளுக்கு ஆயுதங்கள் மற்றும் வாகனங்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டு வந்ததாகச் சந்தேகிக்கப்படும் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரை விஷேட பொலீஸ் குழு வொன்று கைது செய்துள்ளதாக வவுனியாப் பகுதி பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சந்தேக நபர் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசியல் வாதி ஒருவரின் நெருங்கிய உறவினர் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சந்தேக நபர் புலிகளுடன் நெருங்கிய தொடர்பை வைத்துக் கொண்டு அவர்களுக்கு ஆயுதங்கள், வாகனங்கள் போன்ற பொருள்களை விற்பனைசெய்யும் பணியில் நீண்டகாலம் ஈடுபட்டுவந்ததுடன் அதன் மூலம் பல்லாயிரக் கணக்கான ரூபா பணத்தினை வருமானமாகவும் பெற்று வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண வாசியான இச் சந்தேக நபர் பல வருடங்களாக வடக்கில் நடவடிக்கைப் பணியில் ஈடுபட்டவர். ஏற்கனவே கைது செய்யப்பட்ட புலிகள் இயக்க சந்தேக நபர் ஒருவரை விசாரணைக்கு உட்படுத்தியதை அடுத்தே இவ் விவரங்கள் தெரியவந்துள்ளன.

புலிகளின் முக்கிய தலைவர்களுடன் இவர் தொடர்பு வைத்திருந்தார் — என்ற விவரமும் கிடைக்கப் பெற்றுள்ளதை அடுத்துமேலதிக விசாரணைகளுக்காக இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-க-8)

# சமய அறிவு போட்டி

அரியாலை, ஒக். 1

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலய இந்து இளைஞர் மன்றம் நவராத்திரியை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக சமய அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக போட்டி நடத்தப்படும் எனவும் —

அடுத்த மாதம் 16 ஆம் திகதி இப்பரீட்சையை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்— மன்றத் தலைவர் வ. பிரதாப் தெரிவித்தார்.

பரீட்சையில் சித்தியடைவோருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

(ஐ-17)


**NEWTON**

(DMI அருகில், ஆரியகுளம்)

SPOKEN ENGLISH

by: BRITTO

ஆரம்பம்:- 02-10-99

[illegible]

12 மணி (பழைய நேரம்)

(69496)



**நீர் இறைக்கும் இயந்திரம் ஏல விற்பனை**

உடுவில் பிராந்தியத்தில் உள்ள ஆயக்கடவை சித்தி விநாயகர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான EY 2272412 இலக்க நீரிறைக்கும் இயந்திரம் 02 – 10 – 1999 அன்று காலை 10 மணிக்கு சுன்னாகம் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

– செயலாளர்

யாழ்ப்பாண மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபை,
உடுவில்.

(சி/9126)


**அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு முடிவுகள்**

உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியவளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

பரிசுக்குரிய இலக்கங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு – 04228
2 ஆம் பரிசு – 07596
3 ஆம் பரிசு – 06778

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்

00740, 15197, 07076, 08981,
00642, 09212, 04017, 06871.

01—10—99 தொடக்கம் 15—10—99 வரையில் பரிசில்களை அலுவலகத்தில் பெற்று உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பொருளாளர்,
மாணவர் ஒன்றியம்,
உயர்தொழில் நுட்ப நிறுவனம்:
யாழ்ப்பாணம்.

(69490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பயன்தரவல்ல திட்டம்

உலர் உணவு நிவாரணத்துக்கு வழங்கப்படும் பால் மாவுக்குப் பதிலாக ''பைக்கெற்''றுகளில் அடைக்கப்பட்ட பசுப்பால் வழங்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் செயலகம், வடக்கு—கிழக்கு மாகாணசபை, கூட்டுறவுத் திணைக்களம் என்பனவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட ஏனையோரும் இந்தத் திட்டம் குறித்து அண்மையில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

சுமார் 80,000குடும்பங்களுக்கு இப்போது மீளக்குடியமர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது. நான்கு வாரங்களுக்கும் உரிய அரிசி, சீனி, பருப்பு, பால்மா என்பன மாதத்தில் ஒரு தடவை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மேற்கண்ட நான்கு உணவுப் பொருள்களும் கொழும்பில் இருந்து கப்பல்களிலேயே கொண்டுவரப்படுகின்றன.

இவற்றில் ஒன்றான பால்மாவுக்குப் பதிலாக உள்ளூரில் கிடைக்கும் பசுப்பாலை விநியோகிப்பதற்கான திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. உள்ளூர் கால்நடை வளர்ப்போருக்கு பெரும் ஊக்கம் அளிப்பதாக மட்டுமன்றி குடாநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது பங்களிக்கும்.

யாழ்ப்பாண மாவட்டம் மழை குறைந்த பூமியாக இருந்த போதிலும் என்றுமே கால்நடை வளர்ப்பில் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டிருந்தது. வீடு தோறும் பசு வளர்த்தல் ஒரு குடிசைக் கைத்தொழிலாக உயர்ந்து நின்ற காலமும் உண்டு. பல குடும்பங்களில் ஜீவனோபாய மாகவும் அது விளங்கியதை மறந்து விடுவதற்கில்லை.

இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின்னர் பசுப்பால் உற்பத்தி இங்கு வீழ்ச்சி கண்டுள்ளது. காரணம் விவசாயம் செய்யப்படாமல் பல ஏக்கர் காணி இன்னமும் ''சோம்பிக்'' கிடக்கிறது. இடம்பெயர்ந்தபோது விட்டுச் சென்ற கால் நடைகளில் கூடிய வீதம் திரும்பி வந்த போது இங்கு இல்லை.

எனினும் கால்நடை வளர்ப்போர் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் முயற்சியாலும் ஊக்கத்தாலும் கால்நடை வளர்ப்பு ஓரளவு வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் முன்னரைப் போன்று ஊருக்கு ஊர் பாற்சங்கங்கள் இன்னும் வரவில்லை.

இத்தகைய சூழ்நிலையிலும் நாளாந்தம் உற்பத்தியாகும் 12,000 லீற்றர் பசுப்பாலில் 5,000 லீற்றர் எஞ்சுகிறது. இந்தப் பாலைப் ''பைக்கெற்று''களில் அடைத்து உலர் உணவு நிவாரணத்துக்கு வழங்குவது என்ற திட்டம் பயன்தரக் கூடியது.

'பைக்கெற்று' களில் அடைக்கும் பாலை ஒரே தடவையில் வழங்குவதை விட, பிரித்து வழங்கினால் உலர் உணவு பெறுவோருக்கு மேலும் பயனுள்ளதாக இருக்கும். பால் மாவைக் குடிப்பதற்குப் பதிலாக பால் குடிக்கும் வாய்ப்பு உண்டாகும்.

நாளடைவில் பாலை அடைத்து விற்பதற்கான ஓர் ஆலையை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதை இலக்காகக் கொண்டு இத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் பயன்கள் பெருகும். பால் உற்பத்தியை அச்சமின்றி அதிகரிக்கலாம். பசு வளர்ப்பை மேலும் ஊக்குவிக்கலாம். வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் பசுப்பால் அருந்தும் வாய்ப்பு உருவாகும். பாடசாலைகளில் பால் வழங்கும் திட்டம் அறிமுகமாகும் போது உற்பத்தி வாய்ப்பு மேலும் அதிகரிக்கும். அரசாங்கத்தை எதிர்பாராது கூட்டுறவுத் துறையினர் இதில் காலடி எடுத்து வைப்பார்களாக!

# நிம்மதி மூச்சு விடும் நாளுக்காக காத்திருக்கும் வன்னிவாழ் மக்கள்

## அங்கு விஜயம் செய்து திரும்பிய யாழ். ஆயர் கூறும் செய்திகள்

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கடந்த மாதம் இரு தடவைகள் விஜயம் மேற்கொண்ட யாழ்ப்பாணம்-வன்னி மறை மாவட்ட ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் அங்குள்ள மக்களின் அவல நிலை குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்கள் குறித்தும் அளித்த செவ்வி இது.

அங்குள்ள மக்களின் அவலங்கள் தொடர்பாக அவர் தெரிவித்த தகவல்கள் பேட்டியின் இந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் அவர் நடத்திய கலந்துரையாடல் குறித்த விவரங்கள் இரண்டாவது பகுதியாக பின்னர் வெளியாகும்.

வவுனியா முதல் மாங்குளம் வரை வனப்புடன் அமைந்திருந்த தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் இன்று பாலைவனமாக அழிந்த நிலையில் காணப்படுகின்றது என்று யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

கடந்த மாதம் இரு தடவைகள் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு சென்று திரும்பியயாழ். ஆயர் அங்கு தாம் நேரில் கண்டவை குறித்தும், விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடல்கள் குறித்தும் உதயனுக்கு செவ்வி அளித்தார்.

செவ்வி வருமாறு:

★ கேள்வி: வன்னியில் தாங்கள் மேற்கொண்ட விஜயம் குறித்துக் கூறுவீர்களா?

● பதில்: கடந்த மாதம் முதலாம் திகதி முதல் எட்டாம் திகதி வரையும் பின்னர் 20 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையும் வன்னியில் தங்கியிருந்தேன்.

வன்னிக்குச் செல்வதாயின் முதலில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும். பின்னர் வவுனியாவில் ரம்மியாஹவுஸ் இராணுவ முகாமில் மீண்டும் அனுமதி பெறவேண்டும். இந்த அநுமதிகள் யாவற்றையும் பெற்ற பின்னர் படையினரின் வாகன அணிக்காக காத்திருக்க வேண்டும். பெரும் சிக்கல்களைக் கடந்து தான் வன்னிக்கான பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

★ கேள்வி: வவுனியாவில் இருந்து மாங்குளம் வரை நீங்கள் கண்டவற்றைக் கூறுவீர்களா?

★ பதில்: வவுனியாவில் இருந்து மாங்குளம் ஊடாக புதிதாகப் பாதை திறக்கப்பட்டுள்ள இடம் வரையான தூரம் 35 மைல்கள் ஆகும்.

### பாலைவனம் ஊடான பயணம்

அழகான மரங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றால் ரம்மியமாகக் காட்சியளித்த அந்தப் பிரதேசம் தற்சமயம் சுடுகாடு போல் காட்சியளிக்கிறது. வீதியின் இரு மருங்கிலும் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு மரங்களையோ, கட்டடங்களையோ காணமுடியவில்லை. வெட்டவெளியான பாலைவனப் பிரதேசமாகக் காட்சியளிக்கின்றது. மரம், செடி, கொடிகளுடன் அழகாகக் காட்சியளித்த ஓமந்தை, கனகராயன் குளம், மாங்குளம் போன்ற பிரதேசங்கள் மக்கள் எவரும் அற்ற சூனியப் பிரதேசமாகக் காட்சி அளிக்கின்றன. கட்டாக்காலி கால்நடைகளைத்தான் அங்கு பார்க்க முடிந்தது.

வீதியோரங்களில் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற மரங்கள் எவற்றையும் அங்கு காணமுடியவில்லை. அவையெல்லாம் வெட்டப்பட்டு விறகாகினவோ தெரியவில்லை.

பாலைவனம் போன்ற பகுதி ஊடான எமது பயணம் மாங்குளம் சந்தியையும் தாண்டித் தொடர்ந்தது. தமிழ் மக்களின் சொத்துக்கள் என அடையாளம்காட்டி நின்ற பாடசாலைகள், வியாபார நிலையங்கள் அனைத்துமே தரைமட்டமாகியுள்ளன. வாகன அணி திடீரென நிறுத்தப்படுகின்றது. அங்கு இளைப்பாறு மண்டபம், கன்ரீன் எனப் பல கொட்டில்கள் காணப்படுகின்றன. அந்த இடத்தில்தான் புதிய பாதை திறக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

அந்தப் பாதையில் கண்ணுக்கு எட்டக் கூடிய தூரத்தில் ஒரு பக்கத்தில் சிப்பாய்கள் மறு புறத்தில் விடுதலைப் புலிகள். பாதையின் இரு பக்கத்திலும் செஞ்சிலுவைச் சர்வ தேசக்குழு அதிகாரிகள் நடந்து திரிந்த வண்ணம் உள்ளனர்.

15 மீற்றர் அகலமும் 80 மீற்றர் நீளமும் கொண்டது அந்த யுத்த சூனியப் பிரதேசம். பாதை இரு மருங்கிலும் வேலி அடைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாதையூடாக மிக அவதானமாகச் செல்ல வேண்டும். அங்கு நின்று புலிகள் வரவேற்பர். இரு தரப்பும் அந்த யுத்த சூனியப் பிரதேசத்துக்குள் செல்ல முடியாது. செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு அதிகாரிகள் மட்டுமே அங்கு இருப்பர். எவரும் ஆயுதத்துடனும் அதற்குள் நடமாட முடியாது.

புலிகளின் பகுதிக்குள் வந்த பின்னர் தான் பழைய வன்னியின் தோற்றத்தைக் கண்டோம். பாரிய மரங்கள், கொடி, செடி என அழகுறக் காட்சி தந்தது.

அங்கிருந்து சென்றால் பழைய முறி கண்டியில் புலிகளின் சோதனை நிலையம். அங்கு 'பாஸ்' பெற்றுக் கொண்டு நாம் விரும்பிய பகுதிக்குள் செல்லலாம்.

கேள்வி: புதிய பாதை ஊடாகப் போக்குவரத்து எப்படி நடக்கின்றது.?

★ பதில்; வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களிலேயே இந்தப் பாதை திறக்கப்படுகின்றது. அந்தத் தினங்களில் 15 அல்லது 20 லொறிகளில் அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றி இறக்கப்படுகின்றன:



இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வரும் லொறிகள் புதிய பாதையூடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று பொருள்களை ஏற்றிச் செல்கின்றன.

அவசர நோயாளர்கள் மட்டும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். பொது மக்கள் எவரும் அனுமதிக்கப் படுவதில்லை.

### புலிகள் கூறும் காரணம்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஏன் பொது மக்களை அனுமதிப்பதில்லை என்று புலிகள் தலைவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் இருகாரணங்களைச் சுட்டிக் காட்டினர்.

1) பொதுமக்களை இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதிக்கு அனுமதித்தால் முதலில் போக விரும்புபவர்கள் வியாபாரிகள் தான். அவர்கள் வவுனியா சென்று தடை செய்யப்பட்ட பொருள்களை களவாக எடுத்து வந்து படையினரின் சோதனையில் சிக்கினால் 'புலிகளுக்கு தடை செய்யப்பட்ட பொருள்கள் எடுத்துச்செல்ல எடுத்த முயற்சியை முறியடித்துவிட்டோம்' என்று படையினர் பிரசாரம் செய்து எம்மீது பழியைப் போட்டு—மனிதாபிமானப் பணிக்காக திறக்கப்பட்ட — பாதையை மூடி விடுவார்கள். அதனால் எமது மக்களே பாதிக்கப்படுவார்கள்.

2) இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நாம் பொது மக்களை அனுமதித்தால் அவர்களை மனிதகேடயமாகப் பாவித்துப் படையினர் எமது பிரதேசங்களுக்குள் முன்னேறி விடுவார்கள். கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட அநுபவங்கள் இந்தப் பாடத்தை எமக்குப் புகட்டியுள்ளன. இவ்வாறு அவர்கள் முன்னேறும் பட்சத்தில் நாம் பதில் தாக்குதலை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இந்தக் காரணங்களுக்காகவே இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்குப் பொதுமக்களை இதுவரை அனுமதிக்கவில்லை. என்று புலிகளின் பிரதிநிதிகள் என்னிடம் விளக்கினார்கள்.

'மனிதாபிமானப் பணிகளான உணவு விநியோகம், நோயாளர்களை அனுமதித்தல் போன்றவை பாதிக்கப் படும். அத்துடன் பாதையும் மூடப்பட்டுவிடும்' என்றும் அவர்கள் என்னிடம் கூறினர்.

### மக்கள் கூறும் கண்ணீர்க் கதைகள்

★ கேள்வி: அங்குள்ள மக்ளின் நிலைமைகள் தொடர்பாக...?

★ பதில்: மக்கள் சொல்லொணாத் துயரத்தில், பீதியடைந்த நிலையில், எதிர்காலம் கேள்விக் குறியான நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது — அங்கு நாம் இறை பணிகளின் போது சந்தித்த ஒவ்வொருவரும் தமது கண்ணீர்க் கதைகளைத் தான் கூறினர்.

கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், தாய், தந்தையரை இழந்த குழந்தைகள் எனப் பலதரப்பட்டவர்கள் பெரும் கஷ்டத்துடன் இருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

தினமும் இரவு நேரங்களில் ஷெல் வீச்சுச்சத்தங்கள் தான் கேட்கும். காலையில் கிபிர் விமானங்களின் இரைச்சல்கள் தொடரும் இராணுவ நகர்வுகள் மூலம் மக்கள் தமது சொந்த வீடுகளில் இப்போது இல்லை. இடம் பெயர்ந்து களைத்துப் போய் விட்டார்கள். மீண்டும் எப்போது இடம் பெயர்வது என்ற ஏக்க நிலையை பலரின் முகங்கள் காட்டி நின்றன.

இயற்கையும் அவர்களுக்கு எதிராகஉள்ளதோஎன்றுஎண்ணத்தோன்றுகிறது. அகோர வெயில், அதன் காரணமாக கிணறுகள் வற்றிவிட்டன. அக்கராயன் பகுதிகளில் தண்ணீர்ப்பஞ்ச நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அனுபவிக்கும் சுமைகளுடன் இந்தச் சுமையும் சேர்ந்து கொண்டுள்ளது.

போதிய உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் அங்கு போய்ச் சேராததால் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். தொழில்கள் இன்றி உள்ள மக்கள் பொருள்களின் விலையேற்றம், தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் பெரிதும் கஷ்ட நிலையில் வாழ்கின்றனர்.

மாங்குளம் ஊடாக பாதை ஒன்று திறக்கப்பட்டுள்ளதால் ஓரளவு பொருள்கள் அங்கு போய்ச் சேர்ந்த போதும் அவை போதியதாக இல்லை என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

மண்ணெண்ணெய்யின்விலை இன்னமும் குறையவில்லை என மக்கள் தெரிவித்தனர்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

செவ்வி கண்டவர்:
**மாவை குகன்**

## நாளை

புரட்டாதி 15

சனிக்கிழமை

திதி: அட்டமி

நள்ளிரவு 12.07 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

முன்னிரவு 10.39வரை.

மத்தியாஷ்டமி நாள்

ஜபநேரம்: 3.02—4.32

ராகுகாலம்: 9.02—10.32

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

நாம் இறைவனை முழுமையாக நம்பி அவரிடம் எல்லாவற்றையும் சமர்ப்பித்துச் சரணடையும்போது அவர் எவ்வளவு தூரம் நமக்கு வேண்டியவற்றை செய்கிறார் என்பதைக் காணமுடியும்.

சுவாமி ராமகிருஷ்ணானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே.

இம்மாதம் 15 ஆம் திகதி வரைக்கும் அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

(மேற்கண்ட திகதியில் அனுமதி கிடைத்த சங்கானை, நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பயணிகளினதும் யாழ்ப்பாணப்பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பயணிகளில் ஒரு பகுதியினரதும் விவரங்கள் 20 ஆம், 21 ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகின என்பதனை அறியத்தருகின்றோம்.)

### உடுவில்

(097005ஏ), (097005பி), (104373ஏ), (109023ஏ), (109709ஏ), (109709பி), (111163ஏ), (111180ஏ), (116814ஏ), [116814பி], [116817ஏ], (116820ஏ), (116820பி).

(116821ஏ), (116821பி), [115823ஏ], [116823பி], [116823சி[, [116823டி], [116827பி]. [116827சி], [116829ஏ], [116829பி], (116835ஏ).

[116835 பி[, [116845ஏ], [116845பி[, [116845 சி], ]116846 ஏ], ]116850 ஏ[, [116861 ஏ), (116900 ஏ], [117118 ஏ], (108632 ஏ), ]108981 ஏ[, ]114392 ஏ[, (114392 பி], [114392 சி], ]114581 ஏ[, [114676 ஏ], [114676 பி], ]114709 ஏ], [114709 பி], [114822 ஏ). [114838 ஏ], (114838 பி[, [114845 ஏ], (114845 பி). (114991 ஏ[.

(115069 ஏ), [117062 ஏ], [117139 ஏ], [117145 ஏ], [117145 பி], [117206 ஏ], [117206 பி], [111216 ஏ], [117216 பி[, [117222 ஏ], [117297 ஏ], [117323 ஏ], [117335 ஏ], [117335 பி], [117351 ஏ],

[117351 பி],[117400 ஏ], ]117400 பி], [117431 ஏ]. [117431 பி], [117431சி], (117439 ஏ), (117439 பி), (117445 ஏ). (117445 பி), (117453 ஏ]. (117453 பி), (117499 ஏ), (118427 ஏ), (118444ஏ], (118444 பி), (118445 ஏ), (118445 பி), (177163 ஏ).

### வேலணை

[107879ஏ]

[எஸ். எல். என். 11695ஏ], [எஸ். எல். என். 11921பி], [எஸ். எல், என். 11921சி], [எஸ். எல். என். 11940ஏ], [எஸ். எல். என். 11940பி], [எஸ். எல், என். 11957ஏ], [எஸ் எல். என். 11962ஏ], [எஸ். எல். என். 11962பி], [எஸ். எல். என். 11962சி], [எஸ். எல். என். 11962டி],

[எஸ். எல். என். 11968ஏ], [எஸ் எல். என். 11968பி], [எஸ். எல். என். 11968சி], [எஸ். எல். என் 11984ஏ], [எஸ். எல். என். 11984பி], [எஸ் எல். என். 11987ஏ], [எஸ் எல். என். 11990ஏ], [எஸ். எல். என். 12002ஏ], [எஸ். எல். என். 12002பி], [எஸ் எல். என். 12002சி], [எஸ். எல். என். 12015ஏ], [எஸ் எல். என். 12015பி]. [எஸ். எல். என். 12021பி],

[எஸ். எல். என்.12021சி], [எஸ், எல். என். 12022ஏ], [எஸ். எல். என். 12023ஏ], [எஸ். எல். என், 12029ஏ], [எஸ். எல். என். 12030ஏ], [ஏஸ். எல். என். 12030பி], [எஸ். எல். என். 12036ஏ], [எஸ். எல். என். 12050ஏ].

இம்மாதம் 25 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இங்கே தரப்படுகின்றன:

### சங்கானை

(103313ஏ), (106099ஏ), [115065ஏ], [115065பி], ]117121ஏ], [117365ஏ], [117420ஏ[. [117421ஏ], [117466ஏ], ]117466பி], [118390ஏ[. [118472ஏ[. [118830ஏ!, [118830பி], [119191ஏ].

### சாவகச்சேரி

(094929 ஏ), (101630 பி), (110512 ஏ), (114461 ஏ), (114571 ஏ), (114571 பி), (111457 சி), (114571டி), (1150002ஏ), (11522பி), (115593 ஏ), (115607 ஏ), (115607 பி), (115687 ஏ),

(115693 ஏ),(115693 பி), (115700 ஏ), (115700 பி), (115700 சி), (115700 டி), (115700 ஈ), (115700 எவ்), (115701 ஏ), (115701 பி), (115712 ஏ). (115712 பி), (115714 ஏ).

(115744ஏ), (115761ஏ), (115765ஏ), (115765பி). (115765சி), (118477ஏ). (118477பி), (118494ஏ), (118494பி). (118505ஏ), (118605ஏ), (125757ஏ), (125757பி), (105016ஏ), (112227ஏ). (112227பி), (112227சி), (114343ஏ), (114352ஏ). (114363ஏ), (114363பி), (114375ஏ), (117729ஏ), (117729பி), (117735ஏ), (117735பி), (117735சி), (117741ஏ), (117756ஏ), (117761ஏ), (117761பி), (117767ஏ), (119494ஏ), (115607ஏ), (115607பி).

### நெடுந்தீவு

[எஸ். எல். என். 11960ஏ]. [எஸ், எல் என். 12057ஏ], [எஸ். எல். என். 12071ஏ], [எஸ். எல். என். 12083ஏ], [என். எல். என். ஸ்ரீலங்கா கடற்படை]

### யாழ்ப்பாணம்

[110295ஏ], [117604ஏ], [107241ஏ], [107241பி], [111604பி], [114022ஏ]. [114117ஏ]. [115793ஈ], [115975ஏ], [115975பி], [116011ஏ], [116011பி].

[116038ஏ], [116038பி], [116038சி], [116042ஏ], [116259ஏ], [116259பி], [116265ஏ], [1178047ஏ], [117818ஏ], [117863ஏ], [117868ஏ]. [117868பி].

[117868சி], [117868டி], (117879ஏ), (117879பி), (117879சி), [117888பி]. [117898ஏ]. ]117906ஏ], [117920ஏ], [117922ஏ], [117922பி], [117927ஏ], [117927பி].

(117927சி), (117929ஏ), [117948ஏ), (117984ஏ), (117984பி), [117985ஏ), (118005ஏ), (118015ஏ), (118015பி), (118023ஏ), (118023பி), (118023சி),

(118023டி), (118030ஏ), (113030பி), (118030சி), (118030டி), (118036ஏ), (118036பி), (118040ஏ), (118040பி), (118040சி), (118072ஏ), (118075ஏ), (118114ஏ), (118142ஏ),

[118158ஏ], [118163ஏ], [118163பி], [118163சி], [118163டி], [118165ஏ], [118165பி], [118174ஏ], [118174பி], [118174சி], [118185ஏ], [118187ஏ], [118188ஏ], [118188பி].

[118189ஏ], [118189பி], [118199ஏ], [118199பி], [118199சி], [118205ஏ], [118205பி], [118213ஏ]. [118214ஏ], [118214பி], [118222ஏ], [118222பி], [118234ஏ], [118234பி], [118234சி]. (118242ஏ), (118244ஏ), (118251ஏ), (118251பி). (118260ஏ), (118260பி), (118261ஏ), (118244ஏ). (118266ஏ), (118270ஏ), (118270பி), (118271ஏ). (118239ஏ),

(118275 ஏ), (119684ஏ), (119689ஏ), (119689பி), (119689சி), (119689டி), (119691ஏ), (119697ஏ), (119704ஏ), (119704பி), (119711ஏ), (119714ஏ), (119719ஏ), (119719பி).

(119719சி), (119722ஏ), (119722பி), (119724ஏ), (119726ஏ), (119727ஏ), (119727பி), (119730ஏ), (119736ஏ), (119736பி), (119757ஏ), (119762ஏ), (119765ஏ).

(120280ஏ), (120280பி), (120287ஏ), (120287பி), (120290ஏ), (120293ஏ), (120298ஏ), (120319ஏ), (120319பி), (120340ஏ), (120340பி), [120344ஏ], [120344பி], [120344சி] [120383ஏ], [120453ஏ], [120464ஏ], [120481ஏ], [120481பி].

### கரவெட்டி

[108120ஏ], [113614ஏ], [113633ஏ], [113756ஏ], [115100ஏ], [115124ஏ], [115124பி], [115496ஏ], [115496பி], [115526ஏ], [115526பி], [095296சி], [106909ஏ].

[108240ஏ], [108240பி], [108240சி], [108240டி], [111393ஏ[, [111393பி], [111952ஏ], [111952பி], [113306ஏ], [113358ஏ], [113425ஏ], [108120ஏ], [113556ஏ], [113565ஏ[.

(113581ஏ), (113581பி), (113581சி), (113643ஏ), (113643பி), (113690ஏ), (113773ஏ), (115077ஏ), (115093ஏ), (115093பி), (115093சி), (115093டி), (115094ஏ), (115136ஏ),

(115136பி), (115136சி), (115136டி), (115136ஈ), (115136எவ்), (115166ஏ), (115227ஏ), (115227பி), (115237ஏ), (115407ஏ), (115428ஏ), (115469ஏ), (115469சி). (115469பி) ).

(115518 ஏ),(115518 பி), (115562 ஏ). (115562 பி), (118701 ஏ), (118701 பி), (118701 சி), (118701 டி), (118751 ஏ), (118765 ஏ), (118765 பி), (118783 ஏ), (118787 ஏ). (118787 பி), (118973 ஏ), (119002 ஏ), (119002 பி), (119788 ஏ), (119788 பி). (118784 ஏ),

(தொடரும்)

# நிம்மதி மூச்சு....

[ஐந்தாம் பக்கத் தொடர்]

ஒரு லீற்றர் மண்எண்ணெய் 110 ரூபா முதல் 120 ரூபா வரை விற்பனையாவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

1995 ஆம் ஆண்டு குடாநாட்டில் இருந்து எத்தகைய நிலையில் வந்து இங்கு தங்கினோமோ, அதைவிட மோசமான நிலையில் உள்ளோம் என்று குடாநாட்டில் இருந்து சென்று வாழும் பலரும் கூறினர்.

"தங்களுக்கு ஆதரவளித்து வாழ்ந்த அந்த மாவட்டங்களின் மக்களும் இடம்பெயர்ந்து கஷ்ட நிலையில் உள்ளதால். எமக்கு ஆறுதல் கூற எவரும் இல்லையே" என்று அந்த மக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

நிம்மதிப் பெருமூச்சு விடும் காலம் எப்போது வரும் என்று அவர்கள் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

### 'கிபிர்' தாக்குதல் அனர்த்தம்

★ கேள்வி:- புதுக்குடியிருப்பு மந்துவில் கிராமத்தில் இடம்பெற்ற விமானத்தாக்குதல் தொடர்பாக ...?

★ பதில்:- அந்தக் கிராமத்தை நேரில் பார்த்தேன். பல தடவைகள் இடம்பெயர்ந்து இறுதியாக சிறுசிறு கொட்டில்களை அமைத்து மக்கள் வாழ்ந்த பகுதியிலேயே விமானத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அங்கு பெரிய சந்தை கூட இல்லை. சிறிய கொட்டில் ஒன்றிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் தான் இந்தச் சந்தை சில மணி நேரங்கள் கூடும். மக்கள் தமது பொருள்களை வாங்கியதும் கலைந்து விடும்.

அந்தச் சந்தையில் அன்று மக்கள் கூடியிருந்த நிலையில் இரு கிபிர் விமானங்கள் வட்டமிட்டுள்ளன. மக்கள் ஏதோ அனர்த்தம் நடக்கப்போகின்றதோ என்று அச்சம் கொண்டு பாதுகாப்புத் தேடி சிதறி ஓடியுள்ளனர். அச்சமயம் இரு குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இந்த தாக்குதல் காரணமாக உடல்கள் சிதறிய நிலையில் குவியல்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. எங்கும் அவலக் குரல்கள் கேட்டன என்று அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாணம், அச்சுவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் என்னிடம் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்தில் கால் கிலோமீற்றர் சதுர அளவு இடத்தில் உள்ள குடிசைகள் யாவும் தீக்கிரையாகியிருந்தன. மரங்கள் முறிந்து வீழ்ந்து கிடந்தன. பெரும் தீவிபத்து இடம்பெற்றது போன்ற காட்சியையே அங்கு கண்டேன்.

சம்பவம் நடந்த பகுதியில் விடுதலைப் புலிகளின் [illegible] எதையும் காணவில்லை. அந்த இடத்தில் இருந்து சுமார் 2 அல்லது 3 கிலோமீற்றர் தூரத்திலேயே புலிகளின் முகாம்களைக் கண்டேன்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த 22 பொதுமக்களின் உறவினர்களையும் சந்தித்து அவர்களின் துயரங்களில் பங்கேற்றோம். அவர்கள் மனங்களில் இருந்து திகில் நிறைந்த அந்தக் கோரக் காட்சி இன்னமும் அகலவில்லை என்பதை உணர்ந்தோம். அவர்களுக்காக அங்கு பிரார்த்தித்தோம்.

### ஆஸ்பத்திரி நிலைமை

அதன் பின்னர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்டோம்.

சிறு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், வயோதிபர்கள் என காயமடைந்த நிலையில் அங்கு பொது மக்கள் இருந்தனர்,

தனது இரண்டு வயதுப் பெண் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக அந்தக் குழந்தையை அணைத்த படி இருந்த தாய் குண்டு வீச்சில் உயிரிழக்க அந்தக் குழந்தை வயிற்றில்காயமடைந்த நிலையில் அம்மா அம்மா என்று அழுதவாறு அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் காட்சி மனதை நெருடுவதாக இருந்தது.

நோயாளர்களால் நிரம்பி [illegible] காலையில் போதிய மருந்து இல்லை; வைத்திய நிபுணர் இல்லை, சாதாரண வைத்தியரே அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நிலை.

அத்துடன் அந்த வைத்தியசாலையில் ஓர் அம்புலன்ஸ் வண்டியே உள்ளது. அந்த அம்புலன்ஸ் வண்டி 2 அல்லது 3 அவசர நோயாளருடன் வவுனியா சென்றால் ஒரு வாரத்தின் பின்னரே திரும்பி வரும். அதற்கிடையில் வைத்திய சாலையில் வேறு அவசர நோயாளி மரணமாகி விடுவார் என்று அந்த வைத்தியசாலை டாக்டர்கள் தெரிவித்தனர்.

★

# வீடியோப் படக்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை மு,ப 10 மணி முதல் 12 மணி வரை புவியியற்றுறை மண்டபத்தில் 'ஆங்கில ரோஜா டயானா' 'சுறா மீனின் வாழ்வு' ஆகிய வீடியோப் படக்காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன.

இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

(ஐ-ரி)

# பெரும் புள்ளி ஒருவரைக் கொல்ல திட்டமிட்டனராம்

## திருமலையில் மூவர் கைது

திருகோணமலை, ஒக். 1

திருகோணமலை நகரப் பகுதியில் உள்ள பெரும் புள்ளி ஒருவரைப் படுகொலை செய்யும் திட்டம் ஒன்றுடன் வந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் மூவரைக் கைதுசெய்துள்ளதாக திருகோணமலை பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் மூவரும் திருமலை நகரின் வியாபார நிலையங்களில் தொழில் புரிந்து வந்துள்ளார்கள் என்றும் —

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் நடமாடும் பகுதிகளில் இருந்து மூன்று மாதங்களுக்கு முன்னர் இவர்கள் திருமலை நகருக்கு வந்தனர் என்றும் —

இவர்களின் இலக்கு பெரும் புள்ளி ஒருவரைப் படுகொலை செய்வதே என்றும் — விசாரணைகளின்போது தெரிய வந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே மூவரை விசாரணைக்கு உட்படுத்தியதை அடுத்தே இந்த மூவரையும கைது செய்ய முடிந்ததாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(இ-க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஜ்பாய், சோனியாவை கொல்ல
# பாகிஸ்தான் உளவுப்பிரிவு திட்டம்
## பஞ்சாப் பொலீஸார் முறியடிப்பு

புதுடில்லி, ஒக். 1

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயையும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையும் கொலை செய்வதற்கு பாகிஸ்தான் உளவுப் படையான ஐ. எஸ். ஐ மேற்கொண்ட முயற்சியைத் தாம் முறியடித்துவிட்டதாகப் பஞ்சாப் மாநிலப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைத் திட்டத்துடன் இந்தியா வந்த பாகிஸ்தான் பிரஜை ஒருவரையும் சீக்கியத் தீவிரவாதி ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளதாக பஞ்சாப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இவர்களிடம் இருந்து பல ஆயுதங்கள், வெடிமருந்துகள், போதைப் பொருள்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும்—

கைது செய்யப்பட்ட இருவரும் அடிக்கடி பாகிஸ்தான் சென்று அங்கிருந்து ஆர். டி. எக்ஸ் எனப்படும் சக்தி வாய்ந்த வெடிமருந்தை இந்தியாவுக்குள் கடத்தி வந்ததாகவும்—

அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

## உலக அரங்கில்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இரு பஞ்சாப் தீவிரவாதிகளிடம் இருந்து இந்தியத் தலைவர்களைக் கொலை செய்வதற்கு பாகிஸ்தான் உளவுப் படை மேற்கொண்ட முயற்சி பற்றிய தகவல் கிடைத்ததாக பஞ்சாப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த இரு தீவிரவாதிகளும் பிரதமர் வாஜ்பாய் மீதும் காங்கிரஸ் தலைவி சோனியா மீதும் தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கென பாகிஸ்தானில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஐ-6)

### பாகிஸ்தானில்
# இந்திய எழுத்தாளரின் முத்தத்தால் சர்ச்சை!

இஸ்லாமாபாத், ஒக். 1

இந்திய எழுத்தாளர் ஒருவர் பாகிஸ்தான் பெண் ஒருவருக்குப் பொது மேடையில் வைத்து வழங்கிய முத்தம் பாகிஸ்தானில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஜெஹாங்கீர் காஸியின் மகளுக்கு இந்திய எழுத்தாளர் குஷ்வந்த் சிங் கொடுத்த முத்தமே பாகிஸ்தானில் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

குஷ்வந்த் சிங் எழுதிய 'கம்பனி ஒவ் வுமன்' என்ற புத்தக வெளியீட்டு விழாவிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த பாகிஸ்தான் தூதுவரின் குடும்பத்தினரில் தூதுவரின் மகளது கன்னத்தில் குஷ்வந்த் சிங் முத்தமிட்டார்.

அவர் முத்தமிடும் படத்தை பாகிஸ்தானில் வெளியாகும் உருதுப் பத்திரிகைகள் பெரிதாக வெளியிட்டுள்ளன. இந்தச் சம்பவம் பாகிஸ்தானுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தி உள்ளதாக அந்தப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள குடும்பத்தினரை அனுமதித்தது குறித்து விளக்கம் அளிக்கும்படி தனது தூதரிடம் பாகிஸ்தான் அரசு விளக்கம் கேட்டுள்ளது.

அண்மையில் கார்கிலில் இடம்பெற்ற மோதல்களுக்கு பின்னர் இரு நாட்டு உறவுகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் பாகிஸ்தான் மக்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

# இந்தியாவைச் சீர்குலைக்க பாகிஸ்தான் முயல்கிறது
## அத்வானி குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக். 01

பாகிஸ்தான் தனது உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. மூலம் இந்தியாவைச் சீர்குலைக்க முயன்று வருகின்றது. என இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி குற்றஞ்சாட்டி உள்ளார்.

அசாம் மாநிலம் நவ்ஜான் மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பேரணி ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் இயங்கிவரும் சில தீவிரவாத அமைப்புக்களின் உதவியுடன் இந்தியாவில் குழப்பம் விளைவிக்க ஐ. எஸ். ஐ. முயல்கின்றது என்றும்—

அதன் முயற்சிகளை அரசாங்கம் நிச்சயம் முறியடிக்கும் என்றும்—அத்வானி கூறினார்.

பாகிஸ்தான் இந்தியாவை சீர்குலைக்க எடுக்கும் நடவடிக்கைகளையும் இந்திய எல்லைக்குவெளியே இருந்து குற்றச் செயல்களை ஊக்குவிப்பதுதொடர்பாகவும்சர்வதேச சமூகத்திடம் இந்தியா எடுத்துரைக்கும் என்றும் அவர் சொன்னார். [இ-9]

# ஆள் இல்லாத விமானம் இந்தியா பரிசோதித்தது!
## தாக்குதலுக்கும் பயன்படுத்தலாம்

புதுடில்லி, ஒக். 1

ஆள் இல்லாது இயங்கும் தன்னியக்க தாக்குதல் விமானம் ஒன்றை இந்தியா தயாரித்துள்ளது.

'நிஷாந்த்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் ஓர் உள்ளூர்தயாரிப்பாகும் என இந்த விமானத்தைத் தயாரித்துள்ள இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஒரிசா மாநிலத்தின் கிழக்கு வங்கக்கடல் கரையோரம் உள்ள சாந்திபூர் நடுத்தொலைவு சோதனைத் தளத்தில் இருந்து புதிய விமானம் வெற்றிகரமாகப் பரீட்சித்துப்பார்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானம் தரையில் இருக்கும் கட்டுப்பாட்டுத் தளத்தின் வழிகாட்டலில் இயங்கும்.

இலக்குகள் மீது துல்லியமாகத் தாக்குதல் நடத்துவதுடன் போர்த்தளங்களை கண்காணித்து செய்திகளையும், புகைப்படங்களையும் கட்டுப்பாட்டுத்தளத்துக்கு அனுப்புவதற்கான நவீன வசதிகளும் இந்த விமானத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆள் இல்லாது இயங்கும் தன்னியக்க உளவு விமானம் ஒன்றை இந்தியா கடந்த ஏப்ரலில் வெற்றிகரமாக சோதனை செய்தது தெரிந்ததே.

அதன் இரண்டாவது கட்டமாகவே தற்போதைய சோதனை இடம் பெற்றுள்ளது.

இந்த விமானத்தின் பெயரான 'நிஷாந்த்' என்பதற்கு 'ஓய்வு இல்லாதது' என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)

# 276 ஈராக் கைதிகளை ஈரான் விடுதலை செய்தது

ஈரான் — ஈராக் யுத்தத்தின் போது ஈரானால் பிடிக்கப்பட்ட 276 ஈராக் யுத்தக் கைதிகளை ஈரான் நேற்று விடுதலை செய்தது

இருநாடுகளுக்கும் இடையே 1980 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற சண்டைகளின் போது ஈரானால் கைது செய்யப்பட்ட ஈராக்கியப் படையினரில் ஒரு தொகுதியினரே 11 ஆண்டுகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஈரானின் புரட்சித்தலைவர் ஆயத்துல்லா கொமேனியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு இவர்களை விடுதலை செய்ததாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் தனது படையினரில் சுமார் 13 ஆயிரம் பேரை சிறையில் அடைத்துள்ளதாக ஈராக்கும் —

ஈராக்கில் தனது படையினர் 2 ஆயிரத்து 800 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக ஈரானும் —

தெரிவித்து வருகின்றன.

ஏனைய போர்க் கைதிகளை விடுவிப்பது தொடர்பான பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தப் போவதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன

போரின் போது கைது செய்யப்பட்டவர்களில் 5 ஆயிரத்து 500 பேரை ஈரானும் 6 ஆயிரம் பேரை ஈராக்கும் இதுவரை விடுதலை செய்துள்ளன. (ஐ-6)

## எண்ணெய் வயல் கண்டுபிடிப்பு

ஈரானின் தென்மேற்கு மாகாணம் ஒன்றில் பெரும் எண்ணெய் வயல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்த எண்ணெய் வயலில் இருந்து 600 கோடி பீப்பாய் அளவிலான மசகு எண்ணெய் பெற முடியும் என ஆரம்பக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு முதல் இந்த எண்ணெய் வயலில் இருந்து மசகு எண்ணெய் உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என ஈரானின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வயலில் இருந்து நாளாந்தம் 4 லட்சம் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும் என ஈரான் எண்ணெய் நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (ஐ-6)

## தாக்குதல்

அங்காரா, ஒக். 1

குர்டிஷ் இனத் தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையை துருக்கியப்படையினர் ஆரம்பித்துள்ளனர். சுமார் 5 ஆயிரம் துருக்கியப் படையினர் எல்லை தாண்டிச் சென்று ஈராக்கிய ாடுகளில் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-6)

## முத்திரையிட உத்தரவு

கொழும்புத்துறை, ஒக். 1

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் உள்ள எரிபொருள் நிரப்பும் சருவிகளுக்கு முத்திரையிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பும் கருவிகள் யாழ். மாவட்டத்தில் இதுவரை முத்திரையிடப்படாமை கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்தே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. [ஐ-30]

## விளையாட்டு உபகரணங்கள்

வலி. கிழக்கு, ஒக் 1

வலிகாமம் கிழக்கு பிரிவில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளது. (ஐ-180)


ஓம் ஸ்ரீ சாயி ராம்

## வாழ்த்துகின்றோம்



### திரு. M. P. ஷண்முகநாதன்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ள எமது சாயி பஜனை நிலைய அங்கத்தவரும், சமூக சேவையாளரும், பிரத்தியேக ஆங்கில ஆசிரியருமான திரு. M P. ஷண்முகநாதன் அவர்களை அவரது பணி சிறக்கவும், நீடூழி வாழவும் இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

சாயி பஜனை நிலையம்
கைதடி.

செயலாளர்
டாக்டர் ம. தில்லைநாதன்
சாயி பஜனை நிலையம்,
கைதடி.

(சி/9135)



## சிறுவர் நாடகப்போட்டி

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு
அரங்க செயற்பாட்டுக் குழு
நடத்தும்
சிறுவர் நாடகப் போட்டி
எதிர்வரும் 02 - 10 - 99, 03 - 10 - 99 திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில்
காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
நாடகத்துறை ஆர்வலர்கள் உயர்தர மாணவர்கள், பார்வையாளர்களாக அழைக்கப்படுகிறார்கள்.

அரங்க செயற்பாட்டுக்குழு, யாழ்ப்பாணம்.
19, பழம் றோட், கந்தர்மடம்.

(69576)



வலி. கிழக்கு

## கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி பொதுக் கூட்டம் 03 - 10 - 99 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு (புதிய நேரம்) நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி அழைக்கின்றோம்.

க. சிவபாதசேகரம்
தலைவர்

வலி. கிழக்கு
கால்நடை வளர்ப்போர் கூ. சங்கம்.

(69511)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றிச் சுலபமான முறையில், விரைவாகக் கதை பயில (பாடசாலை மாணவர்களுக்குஇலக்கணம், வினாவிடை பயிற்சி தனிப் பிரிவாக) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (69419)

## வீடு வாடகைக்கு

இல 91, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் மாடி வீடுஒன்று வாடகைக்கு உண்டு. (மக்கள் வங்கிக்கு முன்பாக) விபரங்கட்கு மேற் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (69475)

## இலகு திருமணசேவை

1974 அவிட்டம், செவ்வாய் 8 மணப்பெண்ணுக்கு வியாபார நாட்டமுள்ள மணமகன் தேவை. ுசீதனம் உண்டு. 1957 சைவ போசன ஆசிரியருக்கு மாற்றுச் சம்பந்தம் தேவை. இளம் விதவைகட்கும் மணமக்கள் வேண்டப்படுகின்றார்கள். தொடர்பு: ஞாயிறுகளில் துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [69507]

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலைக்கு அருகில் ஆடியபாதம் வீதியில் வீடும் (4 அறைகள், நீர்த் தாங்கி, இணைந்த குளியலறை வசதியுடன்) 3 பரப்பு காணியும் பயன்தரு மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. த. ஜெயசிங்கம் இல, 8A, சுவாமியார்வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (69470)

## குத்தகைக்கு

சரஸ்வதி நூல் நிலையத்துக்கு அருகில் நெல் குத்தும் அரிசி ஆலை மிளகாய், மா அரைக்கும் தளபாடங்களுடன் மாத குத்தகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: கா. லோகேந்திரன் இல, 464, கண்டி வீதி, அரியாலை (சி/9120)

## FOR SALE

Viceroy English Typewriter Portable Second Hand For Immediate Sale Offer Rs-3500/- M. D. Thambirajah. 22/11, Bharathy Lane, Chundikuli. (69498)

## தில்லை சோதிடம்

இந்தியாவில் கடலங்குடியில் சோதிடக் கலையைக் கற்றவரும் திரு. ஜி. பார்த்தசாரதியின் மாணவியுமான ஸ்ரீ அன்பு ஜெயவதனி என்பவரிடம் ஜாதகம் பார்த்தல், ஜாதகம் எழுதுதல், திருமணப் பொருத்தங்கள் பார்த்தல் போன்றவற்றை பார்த்து உங்கள் வாழ்வு நலம் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. தில்லையம்பலம், (கரைப்பிட்டி விநாயகர் கோவில் அருகில்) அராலி தெற்கு, அராலி. (69288)

## கைரேகை

மெய்ஞ்ஞான முறைப்படி தெய்வீக அருளால் உங்கள் குறைகள் தீர்த்துத் தரப்படும் தீராத நோயா. கிரகதோசத்தால் கஷ்டமடைகின்றீர்களா? எதுவானாலும் தெய்வீக அருளால் குறைகள் தீர்க்கப்படும். தொடர்பு: சி. சோதிநாகரத்தினம் மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை (பஸ் இலக்கம் 788) (69330)

## விற்பனைக்கு

அலுமாரி, கட்டில் Gas-Cooker, Cylinder, டிவான் Show-Case விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க. கனகசூரியர், 234 கே. கே. எஸ். வீதி, [பழைய பொலீஸ் ஸ்ரேசன் சுன்னாகம்]. (சி/9132)

சாவகச்சேரி கண்டி வீதி, இலங்கைவங்கிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட நான்கு கடைகளும் மேல்மாடி வீடும் விற்பனைக்கு உண்டு. தனித்தனியே பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: ச. நாகராசா, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி/9105)

## வெளிவந்துள்ளது

பண்டிதர் கி. சதாசிவசர்மாவினால் தொகுக்கப்பட்ட கிரந்த எழுத்தில் வெளியிடப்பட்ட நவராத்திரி காலத்துக்குகந்தமகிஷாசுரமர்த்தினிஸ்தோத்திரம் அழகிய கணனிப்பதிப்பில் வெளிவந்துள்ளது. கி. சதாசிவசர்மா, கீதாலயம், மட்டுவில், சாவகச்சேரி. (69394)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் மிக மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. சில்லறை விலை Kg 120/-, மொத்த விலை Kg 110/- தொடர்பு: K. K. குகனேசன் மங்களா பவனம், கச்சாய் வீதி, சாவகச்சேரி. [69484]

## மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நிரந்தரத் தொழில் புரியும் மணமகனுக்கு கல்வி அறிவுள்ள அழகிய படித்த மணப்பெண் தேவை. தொடர்புகளுக்கு: இல. 952, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [69468]

# நினைவஞ்சலி

பதினான்காம் ஆண்டு — மூன்றாம் ஆண்டு





| அமரர் | அமரர் |
|---|---|
| **பொன்னையா செல்லத்துரை** | **செல்லத்துரை காங்கேயன்** |
| (பிரபல நொத்தாரீஸ் கிளாக்கர், நல்லூர்) | (அராலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி) |
| தோற்றம் 21 – 01 – 1907 / மறைவு 14 – 12 – 1985 | தோற்றம் 19 – 04 – 1939 / மறைவு 03 – 10 – 1996 |
| திதி: திருதியை 1 – 10 – 99 | திதி: ஸப்தமி |

எங்களுடைய குடும்பத் தலைவர்களாக இருந்து எங்களைப் பாதுகாத்த இரண்டு தெய்வங்களையும் மறக்க முடியாமல் என்றென்றும் தவிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தாய், சகோதரிகள், சகோதரன், மைத்துனர்கள், மருமகன்கள், மருமகள்கள்.

942, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (69497)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



01–10–1999

செல்வி

## வைஷ்ணவி சிவபாஸ்கரன்

யாழ். சாரங்கா நகை மாடம், அருள் முருகன் நகை அகம், சாவகச்சேரி சிவா நகை மாடம் என்பவற்றின் உரிமையாளர்

**சிவபாஸ்கரன்-ஞானாம்பிகை தம்பதிகளின்**

செல்வப் புதல்வி வைஷ்ணவி

தனது முதலாவது பிறந்த தினத்தை [01—10—99] இன்று 4.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை இவரது அப்பா, அம்மா, அண்ணா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, கனடாவில் உள்ள பெரியத்தை, மாமா, பெரியமச்சாள், சின்னமச்சாள், சித்தப்பா, சித்தி, அண்ணா, ஆசைச்சித்தப்பா, சித்தி, தங்கை, சின்னத்தை, சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னச்சித்தப்பா, இளைய சித்தப்பா, ஆசையத்தை, குட்டியத்தை, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பெரியப்பா பெரியம்மா, பெரியக்கா, ஆசையண்ணா, ஆசையக்கா. குட்டியக்கா, கனடாவில் உள்ள மாமா, மாமி, பெரிய மச்சாள், சின்னமச்சாள், மச்சான், ஜேர்மனியில் உள்ள அப்பப்பா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வண்ணை ஸ்ரீவெங்கடேசப் பெருமானின் அருளினால் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல் கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சிவபாஸ்கரன்.

483, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/9134]

# தெல்லிப்பபழை ப. நோ. கூ. சங்கம்

(வரையுள்ளது)

## சங்கப் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

**1999 - 10 - 24**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1999 - 10 – 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு (புதிய நேரம்) சங்கத்தலைமைக் காரியாலயத்திற்கு அருகில் அமைந்த சங்கக் கல்வி நிலைய இல்லம், "துர்க்காபுரம், தெல்லிப்பழையில் நடைபெறவிருக்கின்றது என்பதனை சங்கப் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

சங்க உபவிதி 43 இன் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏதாவது பிரேரணையைப் பிரேரிக்க விரும்பும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் அப்பிரேரணையின் பிரதியொன்றை 1999-10–10ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக எழுத்துமூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் வருடாந்தப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தனித்தனி அறிவித்தல்கள் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சி. சிவமகாராசா — தலைவர்
சி. முருகையா — செயலாளர்

**தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்,**
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

(சி/9136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறேன்

நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு சமாதான நீதிவானாக பதவி ஏற்ற மத்தொனியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வு பெற்ற அதிபருமாகிய

**உயர்திரு. எஸ். கணேசன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

திரு. என். தங்கராசா
(கிராமசேவையாளர்)
கரவெட்டி.

[69449]

# விற்பனைக்கு

எமது சங்கத்தில் பின்வரும் விவரப்படி
**இரு நல்லின ஆட்டுக்கடாக்கள்**
விற்பனைக்குண்டு.

| | | நிர்ணயிக்கப்பட்ட கூறுவிலை |
|---|---|---|
| இல. 16 கறுப்பு | வயது 13 மாதம் | 4,950,00 |
| இல. 18 மண்ணிறம் | வயது 13 மாதம் | 4,950.00 |

மேற்கண்ட நிர்ணய விலையின் அடிப்படையில் கூறுவிலை கோரப்படுகிறது. தேவையானவர்கள் ஆடுகளைப் பார்வையிட்டு தமது கூறுவிலைகளை 07-10-1999 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/9122)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்
**செல்லத்துரை வேலாயுதபிள்ளை**
(உடையார்) (பேபி)
[ 2 ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டி ]

அன்னையின் மடியில் 09-06-1927
ஆண்டவன் அடியில் 08-04-1999

நிழல் கொடுத்து அன்பு காட்டிய
அன்புத் தந்தையே
உங்கள் நினைவு எம்மை
நித்தமும் வாட்டுதய்யா
எங்கள் கண்களில் நீர் சிந்தினால்
தாங்காதே உங்கள் மனம் — ஆனால்
இன்று வாழ்நாள் முழுவதும் கண்ணீர்
சிந்த வைத்து விட்டீர்களய்யா!
மாதங்கள் ஆறு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சை
விட்டகலாது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01—10—99) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சகோதரன்: செ. நடேசபிள்ளை.

130, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(69474)

## செயற்கை உரம், கிருமிநாசனி இன்றி

# தூய மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோரை ஊக்குவிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஒக். 1

தென்மராட்சிப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் தூய மரக்கறி வகைகளை சந்தைப்படுத்துவதற்கு சாவகச்சேரி நகரசபையினரும் பிரதேசசபையினரும் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

மரக்கறிச்செய்கைக்கு அதிகமான செயற்கைப் பசளை, கிருமிநாசனி பாவிப்பதனால் உடலுக்குத் தீங்கு ஏற்படுகிறது என்று இக் கூட்டத்தில் கலந்துகொண்ட அறவழிப் போராட்டக்குழுவின் செயலாளர் க. ஜீவகதாஸ் சுட்டிக் காட்டினார்.

இயற்கைப் பசளையிட்டு மரக்கறிவகைகளை உற்பத்தி செய்ய விவசாயிகள் ஊக்குவிக்கப்படவேண்டும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு அறவழிப் போராட்டக் குழுவினால் உதவ முடியும் என்றும் அவர் கூறினார்.

தாவளை, இயற்றாலை, கச்சாய், வேம்பிராய் ஆகிய இடங்களில் மாதிரியாகச் செய்கை பண்ணப்பட்ட தூய மரக்கறி உற்பத்தி வெற்றியடைந்துள்ளதாக இக் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்தனர்.

இயற்கைபசளையைஉபயோகித்து மரக்கறி உற்பத்திசெய்யும் விவசாயிகளை இனங் கண்டு விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு விவசாயப் போதனாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஐ-5)

## மாத்தறையில் 5 தமிழர்கள் கைது

கொழும்பு, ஒக். 1

மாத்தறைப் பகுதியில் கெஜனதுர என்ற இடத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த 5 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வரத பெருமாள் [பசறை[ பாலகிருஷ்ணன் [பசறை], முருகையா விஜயகுமார் [பதுளை]பாலகிருஷ்ணன் சிவப்பிரகாசன், சின்னப்பரம் மாணிக்கம் [நமுனுகல] ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் தங்களை அடையாளங்காட்டுவதற்குரிய ஆவணங்களோ, அடையாள அட்டைகளோ இருக்கவில்லை என பொலீஸார் தெரிவித்தனர். [ஐ-8[

## ராஜகோபுரத்துக்கு அடிக்கல்

அரியாலை, ஒக். 1

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்திற்குஇராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது.

வைத்திய கலாநிதி குணரட்ணம் இராஜகோபுரத்திற்கான அடிக்கல்லை சம்பிரதாய பூர்வமாக நட்டார்.

(ஐ-17)

## தீவக மருத்துவ முகாமில் ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

நெடுந்தீவு, ஒக். 1

தீவக லயன்ஸ் கழகம் கடந்த வாரம் நெடுந்தீவில் மேற்கொண்ட இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் பொது மருத்துவப் பரிசோதனையில் 691 நோயாளிகளும் பாடசாலல மாணவர்களுக்கான பரிசோதனையில் 372 மாணவர்களுமாக ஆயிரத்து 63 நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மருந்துகளும் விநியோகிக்கப்பட்டன.

இந்த மருத்துவப் பரிசோதனையின் போது 46 கண் நோயாளர்களும் 19 சலரோக நோயாளர்களும் இனங் காணப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப சிபார்சு செய்யப்பட்டது.

இரண்டு தினங்கள் இடம் பெற்ற இந்நிகழ்ச்சியில் தீவக லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் தலைமையில் மருத்துவ அதிகாரிகள், மாணவர்கள் 20 பேர் கொண்ட குழு நெடுந்தீவுக்கு வருகை தந்தது. சுமார் 15 ஆயிரம் ரூபா வரை பெறுமதியானமருந்துவகைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

லயன்ஸ் கழக மருத்துவச் சிகிச்சை முகாமிற்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா.இராமச்சந்திரன், பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம், பலநோ.கூ. சங்கத் தலைவர் நா. சங்கரப்பிள்ளை, மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ், சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் சு. நடராசலிங்கம், பங்குத் தந்தை அருட்திரு. மொன்வெட் ஆகியோர் தேவையான உதவிகளை வழங்கியிருந்தனர். [ஐ-11]

## தாய்மாருக்கு பால்மா

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் பாலூட்டும் தாய்மாருக்கான விசேட பால்மா முத்திரைகள் அந்தந்தக் கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

பால்மா முத்திரையின் ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்குஉரிய உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கடைகளில் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

[ஐ-117]

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**நுண்கலைமாணி (இசை/ நடனம்) கற்கைநெறிகளுக்கான புதிய அனுமதிகள் 1998 / 99**

**செய்முறை/ நேர்முகப்பரீட்சைகள்**

மேற்படி கற்கைநெறிகளுக்கு செய்முறை / நேர்முகப்பரீட்சைகள் ஒக்ரோபர் 9, 10, 11. 12, 13, 16, 17, 21, 22 ஆகிய திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

அனுமதிக்காக அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளை உடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் மேற்படி தேர்வுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த தகைமைகள் இருந்தும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

— பதிவாளர்

(சி/9124)

# அந்தியேட்டி அழைப்பு நன்றி நவிலலும்



தோற்றம் 23 — 03 — 1942
மறைவு 01 — 09 — 1999

அமரர் **சி. வேலாயுதபிள்ளை**

01 - 09 - 1999 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சி. வேலாயுதபிள்ளையின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டு பலவகை உதவிகள் செய்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

இன்று [01-10-99] வெள்ளிக்கிழமை பகல் 12 00 மணியளவில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக்கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,

31, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(69332)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

TATA லொறி செசி 1612
விற்பனைக்குண்டு.

தொடர்பு:

R, திருஞானசம்பந்தர்
பெரிய அரசடி,
சாவகச்சேரி.

(69504)



**SPOKEN ENGLISH And GRAMMAR**

By: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்:
**02-10-1999**
Sat. 8. 00 am

727, K. K. S. Road.
(யாழ்.இந்துவுக்கு அருகில்)

(69499)


# சேதமடைந்த வீடுகள்/கடைகள்/கட்டடங்கள் மற்றும் தொழில்நிறுவனங்களை புனரமைப்பதற்கான கடன் வசதிகள்

யாழ். மாவட்டத்தில் வடமாகாண மீள்குடியேற்ற அதிகார சபையினால் (RRAN) வருமானத்தைக் கருத்திற்கொண்டு, அரச வங்கிகள் ஊடாக புனரமைப்புக் கடன்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது, இந் நோக்கத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மாதிரியை உபயோகித்து, பின் வரும் நிபந்தனைகளுக்கமைய பூர்த்திசெய்து விண்ணப்பங்களை தமது பகுதி கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலர்/ உ. அ. அதிபர் பிரிவுகளுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

1) விண்ணப்பப்படிவம் தட்டச்சினால் பொறிக்கப்பட்டு 8½X14 அங்குலம் (லீகல்) அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்டு (சுயமாகவும் தயாரிக்கலாம்) விண்ணப்பதாரியால் நிரப்பப்படவேண்டும்.
2) ஒரு விண்ணப்பதாரி 03 படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். (இரண்டு பிரதிகள்)
3) இக்கடனுதவிகள் மூன்று வகையாக வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டிருப்பதால் ரூபா 50,000-த்தை கடனாகப் பெறவிரும்பும் ரூபா 1500-க்கும் ரூபா 5,000-க்கும் இடைப்பட்ட வருமானமுடைய தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் (A) என்ற ஆங்கில எழுத்தை இடவேண்டும்.
ரூபா 1½லட்சம் (150,000) வரையான கடனைப் பெறவிரும்பும் ரூபா 5,000-ற்கு மேல் வருமானமுடைய தகுதியுடைய விண்ணப்பதாரிகள் (B) என்ற ஆங்கில எழுத்தையும்,
ரூபா 5லட்சம் (500,000/-)வரையான கடனைப்பெறவிரும்பும் கடைகள் மற்றும் நிறுவனங்கள் சேதமடைந்த தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது படிவத்தில் (C) என்ற ஆங்கில எழுத்தையும் இடவேண்டும்.
4) விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் மாவட்டத்திலுள்ள எந்த வங்கியின் எந்தக் கிளையில் கடனைப்பெற விண்ணப்பதாரி விரும்புகிறார் என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

FORM:

REF. NO: .................... SERIAL NO: ....................

(Application to be Forwarded to Chairman / RRAN Through G. S. N / A. G. A / D.S. & G. A of the District)

## Application for a Rehabilitation Loan from Bank of Ceylon / People's Bank ............ Branch

1. 1) Applicant's Name in Full:- ....................
1. 2) N. I. C No:- ....................
2. Address:- ....................
3. 1) Grama Niladhari Division:- ....................
3. 2) D. S/A. G. A Division: ....................
4. 1) Address Where The Affected Property Is Situated ....................
4. 2) Whether The Owner Of The Property/ Tenant:- ....................
5. Date of Occurrence of Damage:- ....................
And Cause:- ....................
6. Purpose For Which The Loan Is Required;- ....................
(Rehabilitation/ Reconstruction Of House/ Business Premises/ Equipment)
7. Whether The Applicant or Any Member Of His/Her Family Has Obtained Any Bank Loan Through Reppia:- ....................
8. Approximate Cost of Damage:- Rs. ....................
9. Amount of Loan Required:- Rs. ....................

I Hereby Declare That The Particulars Given Adove Are True And Correct

A Certified Copy of The Family Registration Card is Attached.

.................... DATE .................... SIGNATURE OF APPLICANT

**D.S / A.G.A.**
RECOMMENDED / NOT RECOMMENDED

.................... DATE .................... SIGNATURE OF G.S.N.

**GOVERNMENT AGENT - JAFFNA**
RECOMMENDED / NOT RECOMMENDEED

.................... DATE .................... SIGNATURE OF D.S / A.G.A.

**CHAIRMAN, RRAN**
RECOMMENDED / NOT RECOMMENDED

.................... DATE

GOVERNMENT AGENT
JAFFNA DISTRICT

(C/9125)


இணுவில்

## தர்மசாஸ்தா குருகுலத்தில்

3-10-99 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

## காயத்ரீஹோமப் பெருவிழா

ஷ விழாவில் குருபூசையை அங்கீகரிப்பவர்கள்:

**சிவஸ்ரீ இ. கல்யாண சுந்தரக்குருக்கள்**
சக்களாவத்தை

**சிவஸ்ரீ சி. காசிலிங்கக் குருக்கள்**
தெல்லிப்பழை

**சிவஸ்ரீ சு. கதிர்காமக் குருக்கள்**
ஆனைக் கோட்டை

''சிவாகமகிரியா தத்வநிதி'' பட்டம் பெறுபவர்கள்:

**சிவஸ்ரீ கு. ரவிபாஸ்கரக் குருக்கள்**
பிரதமகுரு பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்தி கோயில்

**சிவஸ்ரீ பால. ஷண்முகக் குருக்கள்**
பிரதமகுரு சீரணி நாக பூஷணி அம்மன் தேவஸ்தானம்

**சிவஸ்ரீ சு. முரளிதரக் குருக்கள்**
பிரதமகுரு கட்டப்பிராய் முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

**சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்களும் மாணவர்களும்.**

காயத்ரீபீடம், இணுவில்.

(69506)


## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 — 06 — 1921



உதிர்வு 02 — 10 — 1986

திருமதி
**மரியரத்தினம் குணரத்தினம்**

'' நித்திய சாந்தி அளித்த நாளும் இறைவா ''

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புகையிரத ஒழுங்கை,
சாவகச்சேரி.

[69509]

## மூன்றாம் வருட நினைவஞ்சலி
### திருப்பலி

தோற்றம் 17 — 08 — 1970



மறைவு 01 — 10 — 1996

**அமரர் அந்தோனி றெஜினோல்ட்**
(ஊழியர் அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை)

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக நாளை (01-10-99) காலை 6. 30 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் அன்னாரின் நினைவாக இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இத் திருப்பலியில் பங்கு பற்றி அன்னாரின் ஆன்ம சாந்திக்காகச் செபிக்கும்படி உங்களை அழைக்கின்றோம்.

தாய், தந்தை, சகோதரங்கள்.

50/1, இராசசிங்கம் வீதி,
திருநகர்,
யாழ்ப்பாணம்.

(69505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வயது மாவட்ட கிரிக்கெட் அணி

# முதற்கட்டத் தெரிவுக்கு 22 வீரர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மாவட்டத்தின் 15 வயதுக்கு உட்பட்டோர் கிரிக்கெட் அணியைத்தெரிவு செய்வதற்காக 22வீரர்களின் பெயர் விவரங்களைக் கொண்ட பூர்வாங்கப் பட்டியல் ஒன்றை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் வெளியிட்டுள்ளது.

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆலோசனையுடன் இந்த வீரர்கள் தெரிவு இடம்பெற்றுள்ளதாக மாவட்ட கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 22 வீரர்களின் விவரம் வருமாறு:

★ ஹாட்லி கல்லூரி:- எஸ். குணதாஸ், ரி. குகரூபன், எல். கிரேட்சன்

★ மானிப்பாய் இந்து:- ஜெ. ராஜகுமார்

★ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி:- ஜி. சுலக்ஷன், எஸ். கண்ணன்

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி:- வி. செந்தில்க்குமரன்

★ கொக்குவில் இந்துக் கல்லூரி:- கே.சத்தியதீபன், சி. மதுசன், எஸ். உமாநாத்

★ யாழ்.மத்திய கல்லூரி:- வி. றஜிவ்குமார், எஸ். கார்த்தீபன். கே. றொகான்

★ யாழ்.இந்து:-கே.ராஜாதித்தன், எம். விஷ்ணுகாந்த், வி. சதீஸ்குமார்

★ யூனிபன் கல்லூரி:- கே. முரளிதரன்

★ புனித பத்திரிசியர் கல்லூரி:-ஜி செல்வன் லொயிட், எஸ். போல்டன்

★ புனித பரியோவான் கல்லூரி:- பி. லவேந்திரா. சி. அகிலன், ஆர். பிரகதீசன்

★ கனகரட்னம் ம.ம.வி :-

இந்த வீரர்கள் 22 பேரையும் நாளை சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருக்கும் தேர்வு போட்டியில் பங்குபற்றுவதற்காக தங்கள் உபகரணங்களுடனும், மதிய உணவுடனும் சமுகம் தந்து, மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் வி கே.சண்முகலிங்கத்தை சந்திக்கும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது.

இந்த 22 வீரர்களில்இருந்து 15 பேர் கொண்ட அணி இறுதியாகத்தெரிவு செய்யப்பட்டு போட்டிகளில் பங்கு பற்ற அனுப்பப்படும் என்று யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அணி அனேகமாக எதிர்வரும் 10 ஆம்திகதி விமானம் மூலம் அநுராதபுரம்செல்லும் என்றும்—

பின்னர் அங்கிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களுக்குச் சென்று அந்தந்த மாவட்டத் தெரிவு அணிகளுடன் முதற்சுற்று ஆட்டங்களில் பங்கு பற்றும் என்றும்—

சங்கவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(உ-5-ரி)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் ''உதயன்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். கரப்பந்தாட்டச் சங்கத்தின், நல்லூர் மைதானத்தில் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெற உள்ள அரை இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணிக்கு— யாழ். பல்கலைக்கழகம் எதிர் ஆவரங்கால் மத்திய வி. க.

★ பிற்பகல் 4 மணிக்கு— ஆவரங்கால் இந்து இளைஞர் வி. க. எதிர் விக்னேஸ்வரா வி. க.

மூன்று ''செற்கள்'' கொண்டதாக இந்த ஆட்டங்கள் நடைபெறும். இறுதி ஆட்டம் நாளை இதே மைதானத்தில் இடம்பெறும். (உ-ரி)

# தென்ஆபிரிக்கா வெற்றி

நைரோபி, ஒக். 1

நைரோபியில் நான்கு நாடுகள் பங்குபற்றும் எல் ஜி. கிண்ணத்துக்கான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று தென் ஆபிரிக்க அணி, கென்யா அணியை 28 ஓட்டங்களால் வென்றது.

நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்ற கென்யா அணித் தலைவர் தென் ஆபிரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்து ஆடப்பணித்தார். தென் ஆபிரிக்க அணி மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 192 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி சிம்பாப்வே அணியை எதிர்த்து விளையாடும். (இ-ரி)

## இலங்கைக்கு 90 பதக்கங்கள்

காட்மண்டுவில் நடைபெறும் எட்டாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் ஆறாவது நாளான நேற்றுடன் இலங்கை 90 பதக்கங்களைப் பெற்றுள்ளது. இதில் 14 தங்கம், 35 வெள்ளி, 41 வெண் கலம் என்பன அடங்கும்.

66 தங்கம், 44 வெள்ளி, 19 வெண்கலம் பதக்கங்களைப் பெற்று இந்தியா தொடர்ந்து முதலிடத்திலும்—

15 தங்கம், 3 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று நேபாளம் இரண்டாம் இடத்திலும்

இலங்கை மூன்றாம் இடத்திலும் உள்ளன.

நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை உதைபந்தாட்ட அணி பங்களாதேஷ் அணியிடம் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்றது. நேற்று மேசைப்பந்தாட்டத்திலும், நீச்சல் போட்டிகளிலும் இலங்கை 6 பதக்கங்களை பெற்றது. (இ-ரி)

# விளையாட்டரங்கு

# யாழ். வலயப் பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டிகள்

குருநகர், ஒக். 1

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

16, 18 வயதுப் பிரிவுகளில் இந்தப் போட்டிகள் நடைபெறும். இரு பிரிவுகளிலும் பங்குபற்றும் அணிகள் முதற்சுற்று ஆட்டங்களுக்காக நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

குழு 'ஏ' அத்தியார் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, நாவாந்துறை றோ. க. வி., கனகரத்தினம் ம. ம. வி., உரும்பிராய் இந்துக் கல்லூரி,

குழு 'பி' — கொக்குவில் இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி ம. வி, புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, புனித மரியாள் வித்தியாலயம், வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,

குழு 'சி' — கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, புனித சாள்ஸ் ம. வி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி,

குழு 'டி' — கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி, புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம், பெரியபுலம் ம வி, கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

குழு 'ஏ' — பெரியபுலம் ம. வி, புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, கனகரத்தினம் ம. ம. வி, புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை,

குழு 'பி' — கோண்டாவில் இந்து ம வி, அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்,

குழு 'சி' — இடைக்காடு ம. வி, செங்குந்தா இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, புனித சாள்ஸ் ம. வி,

குழு 'டி' — நாவாந்துறை றோ. க. வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி.

இந்தப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரி, புத்தூர் வீனஸ். துரையப்பா ஸ்ரேடியம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெற உள்ளன.

(உ-ரி-51)

## உதைபந்தாட்டம்

வடமராட்சி, ஒக். 1

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் சிதம்பராக் கல்லூரி (நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில்)

★ தொண்டமனாறு ம.வி. எதிர் தேவரையாளி இந்து (திக்கம் மைதானத்தில்)

### 18 வயதுப் பிரிவு

★ கம்பர்மலை ம.வி எதிர் சிதம்பராக் கல்லூரி (நெல்லியடி ம.ம.வி. மைதானத்தில்)

★ தொண்டமனாறு ம.வி எதிர் பொன்னம்பலம் ம. வி. (திக்கம் மைதானத்தில்)

[உ-ரி]

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய்ப் பிரிவு பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 14 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

★ பண்டத்தரிப்பு [illegible]

[உ-ரி]

## மூன்றாவது டெஸ்ட் முதல் நாள்

# 4விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களுடன் ஆஸி!

கொழும்பு, ஒக். 1

இலங்கை — ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்றாவதுகிரிக்கெட்டெஸ்ட் போட்டி நேற்று கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் ஆரம்பமானது.

மழை காரணமாக ஆட்டம் குழம்பலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதும் நேற்று முன்தினம் பெய்த கடும்மழையால் நேற்றைய ஆட்டம் ஒரு மணி நேரம் தாமதமாகவே ஆரம்பித்தது. எனினும் பின்னர் எந்தவித காலநிலைக் குழப்பத்தாலும் இடைநிறுத்தப்படாமல் அது தொடர்ந்து நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் தமதுஅணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களான மைக்கல் ஸ்லேட்டரும், க்றேக் பிளிவட்டும் தமது அணிக்கு ஸ்திரமான அடித்தளத்தை இட்டனர்.

126 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதலாவது விக்கெட்டை இழந்த ஆஸ்திரேலிய அணி ஆட்ட நேர இறுதியில் 4 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மைக்கல் ஸ்லேட்டர்—59 க்றெக் பிளிவெட்—70 யஸ்டின் லாங்கர் — 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

முத்தையா முரளிதரன் கையில் காயமுற்ற நிலையிலும் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

(உ-ரி)

# தெரிவான வீரர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ் மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் கடந்த வாரம் நடத்திய 18 வயதுப் பிரிவு, 22 வயதுப் பிரிவு மாவட்ட அணித்தெரிவுகளின் போது தெரிவானோர் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் டானியல் மதியழகன் கேட்டுள்ளார்.

தெரிவுசெய்யப்பட்டோரின் விபரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

அதேநேரம்—

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தால் நேற்று வெளியிடப்பட்டிருந்த 22 வயதுப் பிரிவு யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட தெரிவு அணியில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஏ. அன்ரன் ஜெனில் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். செந்தூரன், எஸ். எம். ஐ. ஜெயரஞ்சன் ஆகியோரது பெயர்கள் தவறுதலாக இடம் பெறவில்லை என அறிவிக்கப்படுகிறது. (இ-ரி)

★ ★ ★

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் 'மிட்சுயி வி. எஸ். பி' வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படவுள்ள கிரிக்கெட் போட்டிக்கு அணி ஒன்றை தெரிவு செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சக வீரர்களையும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டு உபகரணங்களுடன் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது

தேர்ந்தெடுக்கப்பட்ட 22 பேரின் விவரங்கள் 29 ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

(இ-ரி)

# இரத்தம் அவசரம் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'ஓ நெகட்டிவ்', 'ஓ பொசிட்டிவ்' இரத்த வகைகள் அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கிப் பொறுப்பாளர் அறிவிக்கின்றார்.

இந்த வகை இரத்தத்தைத் தானம் செய்ய விரும்புவர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-3)

# சிவில் நிர்வாகப் பணிகளில் தலையிடவேண்டாம்!

## கடற்படையினருக்குநீதிவான்ஆலோசனை

யாழ்ப்பாணம், ஒக். 1

சிவில் நிர்வாக வேலைகளில் கடற்படையினர் தலையிடக் கூடாது என்று ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் எஸ் ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஓடுகளை ஏற்றிச் செல்பவர்களுக்கு கடற்படையினர் அனுமதிப் பத்திரம் வழங்குவது குறித்து பொலீஸாரினால் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் எஸ். ஏ ஈ. ஏகநாதன் முன்னிலையில் இடம் பெற்ற சமயம்—

சிவில்நிர்வாக கடமைகளில் தலையிட்டு கடற்படையினர் தமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடாது என்றும்—

பொலீஸாரும்கிராமசேவை உத்தியோகத்தர்களுமே இத்தகைய பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் — கடற்படையினருக்கு நீதிவான் ஆலோசனை வழங்கினார்.

கடற்படையினர் சார்பில் லெப்டினன்ட் எஸ். பி. சந்திரசேன ஆஜரானார்.

(இ-3-5)

## பயிலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இரண்டாயிரம் ஆண்டில் தரம் ஒன்று வகுப்புக்களில் கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்களுக்கு நாளை முதல் எதிர்வரும் 8ஆம் திகதிவரை வலய முகாமைத்துவ மண்டபத்திலும் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நடத்தப்படவிருந்த பயிலமர்வு பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

பயிலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 2000 DAY CLASS

| | |
|---|---|
| பொருளியல் | — வரதராஜன் |
| வணிகக் கல்வி | — முரளி |
| கணக்கீடு | — முகுந்தன் |
| புள்ளி விபரவியல் | — அம்பிகைபாகன் |
| தமிழ் | — பிரபல ஆசிரியை |
| அளவையியல் | — R. P. சர்மா |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — இக்னேசியஸ் |
| கிறிஸ்தவம் | — வசந்தன் |
| நாடக அரங்கியல் | — ஜெயரஞ்சினி |

ஆரம்பம் 4 - 10 - 99 திங்கள் 9. 00 (ப. நே.)

(69436)


ஒருவர்...

[முதலாம் பக்கத் தொடர்]

பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தின் பணி முடிந்து வீடு சென்ற சமயம் இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


எமது
புதிய வெளியீடு!

கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி நடித்த

## உனக்காக எல்லாம் உனக்காக

★ பிரதிகளை 11-30க்கு பெற்றுக் கொள்ளலாம்.

## சுப்பஸோ வீடியோ

149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/9142]


## கதிர்காமர்...

[முதலாம் பக்கத் தொடர்]

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்தானது தமிழ்மக்கள் மீது இராணுவ அடக்குமுறைத் தீர்வை அமுல் படுத்தும் எண்ணத்துடனே வெளியிடப்பட்டுள்ளது.

உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் எனப் பிரசாரம் செய்து வரும் வெளிவிவகார அமைச்சர் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச உதவியை நிராகரித்தது ஆச்சரியத்தைத் தருகின்றது —என்றுள்ளது.

கதிர்காமரின் கூற்றுக்குத் தமிழ்க்கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளது தெரிந்ததே. (இ-7)

## பி. பி. ஸி ...

(முதலாம் பக்கத் தொடர்)

இது விடயமாக நேற்று நடைபெற்ற வாராந்தசெய்தியாளர் மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும்—

அவருக்கு பாதுகாப்பு தேவையானால் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்றும்—

அந்த மாநாட்டில் பேசிய தொடர்புச்சாதனத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தமக்கு பாதுகாப்பு அக்சறுத்தல் இருப்பதாகத் தெரிவித்தால் அரசாங்கம்அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தயாராக இருக்கின்றது என்றும் அமைச்சர் சொன்னார். (இ-3)

## பொதுநல...

[முதலாம் பக்கத் தொடர்]

டறிந்து கொண்டார்.

கடந்த காலங்களிலும் பார்க்க தற்போதைய அரசின் காலத்திலேயே தமிழ் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர்என்றும்—

போக்குவரத்து மற்றும் தமிழர் கைது போன்றவற்றால் தமிழ்மக்கள்சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும்—தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குக் இடையில் நிலவும் இடைவெளியை நிரப்ப 3 ஆம் தரப்பு ஒன்று இந்த விடயத்தில் தலையிடுவது அவசியம் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

## வவுனியா..

[முதலாம் பக்கத் தொடர்]

வர்கள் பங்கு பற்றினர்.

யாழ். மாவட்டத்தில் ஜி.சீ. ஈ. (சாதாரண) வகுப்பு வரையும் கல்வி பயின்று பின்னர் இந்தவித்தியாலயத்தில் இணைந்து கொண்ட 5 மாணவர்களுக்கு 80 சதவீத வரவை வித்தியாலய அதிபர் காட்டிய தன்மூலம் அவர்கள் வவுனியா கோட்டாவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர் என்றும்—

அதன் காரணமாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் பல்கலைக் கழக அனுமதியை இழந்தனர் என்றும்—

அதற்கு காரணமாக இருந்த அந்தப் பாடசாலை அதிபரை பாடசாலையில்இருந்து இடைநிறுத்த வேண்டும் என்றும்—தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.


ஒக்டோபர் 10 — உலக உளநல நாள்

# முதுமை என்பதோர் அழகினைப்போற்றுவோம்!

**முதுமை -**

அனுபவத் தொகுதியின் பெட்டகம், பட்டறிவின் புத்தகம், ஞானத்தின் நூல் நிலையம், நல்லறிவின் நெடுஞ்சாலை, வாழ்வின் வழிகாட்டி, காலத்தின் களஞ்சியம், அன்பமைதி - அறிவடக்கத்தின் அகராதி!

வேண்டிய வேளைகளில்
அவர்தம் கருத்துக்களைக் கேட்போம்!

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்

அகவொளி உளநலச் சங்கம் சுகவாழ்வு சாந்திகம்


## தென்னிலங்கை...

[முதலாம் பக்கத் தொடர்]

காலத்தில் அரசு நிறைவேற்றாத பட்சத்தில் அவர்களை கொழும்புக்குத் திருப்பி அழைத்துப் போராட்டம் நடத்தப் போவதாகவும்—அரச வைத்தியர் சங்கம் அறிவித்துள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் 300 வைத்தியர்கள் வடக்கு — கிழக்கில் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது. இவர்களில்யாழ். குடாநாட்டில் மட்டும் சுமார் 60 பேர்வரை கடமையாற்றுகின்றனர். [இ-3]

## மாங்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

குச் சமீபமாகவும் அந்தப் பிரதேசத்தைத் தாண்டியும்ஷெல் தாக்குதல்களை நடத்தினர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை உணவுவாகன அணி புறப்பட விருந்தவேளை படையினர் ஏவிய ஷெல் ஒன்று யுத்த சூனியப் பிரதேசத்துக்கு சமீபமாக வீழ்ந்து வெடித்தது என்றும்—

அச்சமயம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வாகன அணித்தொடரணி அதிகாரியான அலன் அவ்விடத்தில் நின்றார் என்றும்—

தொடரணி ஆரம்பிப்பது தாமதப்படுத்தப்பட்டு பாதுகாப்புக்கு உத்தரவாதம் பெறப்பட்ட பின்னரே உணவு வரகன அணி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் அனுமதிக்கப்பட்டது என்றும்—தெரிவிக்கப்பட்டது.


## A/L 2000 DAY CLASS

**கலைப் பிரிவு**

நாளை ஆரம்பம்
காலை 7 மணி (ப. நே.)

**D. M. I.**

ஸ்ரான்லி வீதி,
யாழ்.

— D. SAM

[சி/9137]



# நடுவப் பணிமனை திறப்பு விழா



127, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

புனரமைக்கப்பட்ட நடுவப் பணிமனைக் கட்டடம்

யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர்

**திரு. க. சண்முகநாதன் அவர்களால்**

இன்று 1999 ஒக்டோபர் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
காலை 9-00 மணிக்கு
வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படும்.

- யாழ். ப.நோ.கூ. சங்கம்.

(சி/9133)



# நல்ல சமாரியன் தேவாலயம்

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார் (ஏசாயா 53: 4)

அன்பார்ந்த சகோதரனே! சகோதரியே! காலமெல்லாம் கண்ணீரோடு வாழ்கின்றாயா என்நோய் தீராதா என்று கவலையோடும் துயரத்தோடும் வாழும் உங்கள் அனைவரையும் அன்பாய் அழைக்கிறார். வைத்தியர்களாலும் கை விடப்பட்டு மரணத்தோடு போராடும் உங்களை இயேசு குணமாக்குவார். வாருங்கள்; வந்து விடுதலை பெறுங்கள். உங்கள் சகல பிரச்சினைக்காகவும் ஜெபிக்க ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை பி. ப. 2. 30 தொடக்கம் 5. 00 மணிவரை சுகமளிக்கும் ஆராதனை நடைபெறும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

நடைபெறும் இடம்:-

நல்ல சமாரியன் ஆலயம்.
பலாலி றோட், கோண்டாவில்.

(69472)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org